தமிழ் வாழ்க

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத்துத்

திங்கள் வெளியீடு

இருபதாம் துணர்

தாரண ஆண்டு — 1944, 45.

பொழிலாசிரியர்

வித்துவான். கோ. சி. பெரியசாமிப் புலவர்.

தஞ்சைக் கூட்டுறவு
மின்னியக்கப் பதிப்பகத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

உ

தமிழ்ப் பொழில்

துணர் இருபது

பொருள் அடக்கம்.

திருவாளர்கள்,

1. அரங்கசாமி V. A. வித்துவான்.
   பொருநராற்றுப்படை 94

2. இராமநாதன் செட்டியார், V. பாலகவி, வயிநாகரம்.
   சேக்கிழார் பிள்ளைத் தமிழ் 40

3. இலக்குவனார் S. B.O.L.,
   அம்மூவனார் 126, 145, 171

4. கதிரேசன் செட்டியார் M. மகாமகோபாத்தியாயர்
   வலம்புரித் தமிழிசை மாநாட்டு முன்னுரை 122

5. கரும்படுசொல்லி V. S. ஐயாறு
   காரைக்காலம்மையார் 239

6. குமாரசாமி பிள்ளை ஐ. இராவ்சாகிபு
   பேரறிஞர், இலக்குமணசாமிமுதலியார் வருகை
   A, T. P. நினைவுக்குறிகள் 136
   தஞ்சை வள்ளலின் தகுதிசால் நன்கொடை 136
   கல்லூரித் தலைவர் P. R. M. நியமனம் 70

7. குழந்தைவேலன் A. ஆசிரியர், கரந்தை
   தமிழ்வளம் போற்றுக 192, 215, 225

8. கோவிந்தசாமி பிள்ளை S. K. M. A.
   சிலப்பதிகாரத்தில் சில நாடக மாந்தர் 33, 86

திருவாளர்கள்,

9. சங்கம்

வேண்டுகின்றோம் 20

தமிழவேள் நினைவுத் திருநாள் 31

கலைமகள் விழா 159

Sir. P. K. சண்முகத்திற்கு வாழ்த்து 169

Sir. P. T. இராசனுக்கு வாழ்த்து 71

10. சுந்தரேச வாண்டையார் V. வித்வான்

செம்பியன்மாதேவியார் 79

திருத்தொண்டர்புராணம் பெரியர்புராணம் 119

11. சோமசுந்தர பாரதியார் S. நாவலர். M.A.,B.L.,

மெய்கண்டார் நூல்மொழி பெயர்ப்பா 37

12. சோமசுந்தரம் பிள்ளை K. B.A.,B.L.

இருபாவிகள் 229

பேராசிரியர் சண்முகம் பிள்ளை வரலாறு 63

ஷெல்லியின் வானம்பாடி 204

13. துரைசாமி பிள்ளை S. ஔவை. வித்வான்.

பண்டைநாளைச் சேரமன்னர்கள் 57, 89, 11, 1, 1, 15

14. துரையரங்க ராமானுசதாசர், புதுவை

வைணவம் 72

15. நவநீதகிருட்டினன் T. P. M. A.

தாமஸ்ஹென்றிஹக்ஸ்லி 53, 81, 105

16. பழநி முதலியார் U. வித்துவான்

புறப்பொருள் வெண்பாமாலை 233

17. பொழிலாசிரியர்

கருத்துரைகள்:—1, 22, 25, 49, 73, 95, 103, 113, 137161, 185, 193, 200,

ஈ. மு. வே. அவர்களின் கல்லறைச் சொற்பொழிவு 9

வரலாற்றுப் பகுதி 44

திருவாளர்கள்,

18. மீனவன்
அரசருள் ஏறு 204

19. மீனாட்சிசுந்தரம் பிள்ளை P. R. M. A.
பாணன் வருகை 153, 174

20. வரதநஞ்சையப் பிள்ளை A. ஆசிரியர்
நோய்தரு படுக்கையில் ஒய்வறு நினைவுகள் 101

21. விசுவநாதன் L. திரிசிரபுரம்
முளியேன் 158

22. வேங்கடராசுலு ரெட்டியார் V. வித்துவான்
சிறுசோறு 197

23. பிறசெய்திகள் :—
இரங்கற்செய்தி 21
இரங்கற்பாக்கள் 13
தமிழிசை அழைப்பு 180
தமிழிசைச் சங்க வாழ்த்து (Sir. R. K. S.) 177
கா. மு. வே. நினைவுத் திருநாள் 27
நிகழ்ச்சி அறிவிப்பு 19, 39
பட்டமளிப்பு விழாவுரை 184
புத்தாண்டு வாழ்த்து 191
ஹீராஸ்பாதிரியார் பேச்சு 142

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் உம் } தாரண—சித்திரை 1944—ஏப்பிரல் { மலர் க

தாரண ஆண்டிற்பொழில் தாரணிந் தோங்குக !

தமிழ்ப்பொழிலின் பத்தொன்பதாம் துணர் சுபானு ஆண்டு பங்குனித் திங்களோடு நிறைவெய்தி இத்தாரண ஆண்டின் தொடக்கத்தே இருபதாம் துணர் தொடங்கப் பெறுகின்றது. பொழில் தொடங்கப்பெற்ற இப்பத்தொன்பது ஆண்டுகளாகத் தமிழ்ச் செல்வர்களும், தமிழ்ப்புலவர்களும், நாட்டாண்மை, நகராண்மைக்கழகத் தலைவர்களும், தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, கல்லூரித்தலைவர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும் பொழிலின் வளர்ச்சிவேண்டிப் பொருள்நீர்பாய்ச்சிப் பொழில் நிழல் அமர்ந்து, பொழிலின் இனிய மலர்களை நுகர்ந்தும், நறுங்கனிகளை உண்டும், மகிழ்ந்து தேக்கெறிந்து பல்லாறுக வாழ்த்திப் போற்றினர்கள். பேராசிரியர்கள்பலர் அருளுளங்கொண்டு, நம்பொழிலின் வளர்ச்சிவேண்டி அவ்வப்பொழுது கட்டுரைவரைந் துய்த்தருளினார்கள், உலகப் பெரும் போர் காரணமாக, அரசியலார் தாள் வரையறுப்போர் (Paper Controler) வழியே யாம் இவ்வளவில் தான் தாட்செலவிடலாம் என ஆணையிட்டுள்ளமையாலும், அவ்வாணையை மீறின் ஒறுப்புத்தொகையும், சிறையகம் புகலும் ஆகிய இருதண்டமும் விதிக்கப்பெறுமென அச்சுறுத்தியுள்ளமையாலும், பொழிலின் பக்கங்களையும் குறைத்து, அளவையும் குறைத்து, யாம் அச்சிடுதற்குரிய நெருக்கடிக்குள்ளானேம். இக்காரணங்களால் எம்மிடத்து அன்புகொண்டு ஆசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள் அளித்த நீண்ட கட்டுரைகளை உடனுக்குடன் பொழிலில் வெளியிடத் தவறினேம். பேராசிரியர் பலர் எம், பிழையையும் பொறுத்து மேலும் மேலும் தம் அருளூற்றறுமல் கட்டுரைகளை உய்த்துக் கொண்டே யிருக்கின்றனர். அப்பேராசிரியர்கட் கெல்லாம் எம் நன்றியறிதலை யறிவிக்கின்றேம். இத்தாரண ஆண்டு உலகப் பெரும்போர் ஒழிந்து, உலகத்துன்பங்களும் துடைக்கப் பெற்று அமைதியும் இன்பமும் நிலவுதற்குரிய நல்யாண்டாகுமாயின் நம் பொழிலின் அளவினையும் பக்கங்களையும் பெருக்கிப் புத்தெழில் தழையப் பொழிலை வெளியிடலாமென அன்பர்கட்கறிவிக்க விரும்புகின்றேம். பொருளுரை வழங்கும் பெரியோர்கள் இக்கால நெருக்கடியை யெண்ணிப் பொறுத்தருள வேண்டுகின்றேம். கலைநலமலிந்த கட்டுரைகளைக் கண்ணெனப்போற்றி வெளியிட்டுதவும் கடப்பாடுடை

யேமாயினும் காலக்கொடுமை இடம் தரவில்லையே யெனக் கவல்கின்றேம். பேராசிரியர்கள் 'உய்த்தருளும் கட்டுரைகளைக் கண்ணெனப் போற்றி ஓம்படைபுரிந்து உரியகாலத்தில் வெளியிடுவேமென உறுதி கூறுகின்றேம். தமிழ்நாட்டி லுள்ள பல நகரங்கட்கும் சொற்பொழிவாற்ற யாம் செல்லுங்கால் ஆண்டாண்டுள்ள செல்வர்களும், மாணவர்களும், ஆசிரியர்களும் பொழில் வேண்டும், பொழில் வேண்டும் என எம்மை அணுகிக் கேட்டுப் பொழில்உறுப்பினராகச் சேர்தற்கு வலிய வந்துறுகின்றனர். இப்பொழுதேனும் பொழிலின் உயர்ந்த தமிழ்த்தொண்டினைத் தமிழ்நாடு போற்றுகின்றதே என்பதனை எண்ணும்பொழுது மிக மிக மகிழ்கின்றேம். பொழிலுறுப்பினராயுள்ள அன்பர்கள் இதுகாறும் பொழிலை ஆதரித்துப் போற்றியவாறே இனியும் ஆதரித்துப் போற்ற வேண்டுகின்றேம். உலகநாகரிகத்திற்குப் பகைவர்களாகத் தோன்றியுள்ள கொடியோர்கள் அழிவுற்று, அற ஆட்சி புரியும் நம் ஆங்கில அரசர் வென்றி கொண்டு தாரணிய இத்தாரண ஆண்டு தார் அண்ணும் ஆண்டாகுக என இவ்வாண்டினை வரவேற்று நல்வரவு கூறுகின்றேம். நம் சங்கச்சார்பில் தமிழ்ப்பொழிலை மிகுபொருட்செலவில் எக்குறிக்கோளுடன் வெளியிட்டு வருகின்றேமென்பதை யுணராத அன்பர்கள்பலர் எத்துணையோ நாட்டாள்களிலும் கிழமைத்தாள்களிலும் வெளியிடப்பெற்று வெளியான் செய்திகளைப் பொழிலில் வெளியிட வில்லையே என வருந்தி மடல் வரைகின்றனர். சிறந்த இலக்கியக் கட்டுரைகளைப் பொழிலில் வெளியிடலாமே யன்றி விளம்பரங்களையும் ஆண்டாண்டு நிகழ்ந்த கூட்ட நிகழ்ச்சிகளையும் விழாநிகழ்ச்சிகளையும் தமிழ்ப்பொழிலில் வெளியிடற்கினியியலாதென்பதனைப்பணிவுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றேம். தனக்குற்ற இடுக்கண்களை வீழ்த்தி இத்தாரண ஆண்டுப் பொழில் தமிழ்த் தாயின் தண்ணருளால் தாரணிந்தோங்குக என வாழ்த்துகின்றேம்.

தமிழர்படைத் தலைவரின் தனிப்பெரும் வெற்றி.

வித்துவான் ஒழிந்தது விளங்கநற் புலவர்சொல்

தஞ்சைமா நாட்டில் அரசியலில் முதன் முதல் எல்லோரானும் சிறந்த தலைவர் என மதித்துப் போற்றப் பெற்றவர் திருவாளர் இராவுசாகிபு. ஐ. குமாரசாமி பிள்ளையவர்களே யாவார்கள். இம் மாவட்டத்தில் வட்டாண்மைக்கழகத் தலைவராகவும், (Taluk Board President) மாவட்டக் கல்விக்கழகத் தலைவராகவும் (Education Board President) நகராண்மைக்கழகத் தலைவராகவும் (Municipal Chairman) எம் கரந்தைத் தமிழ்ச்சங்கத் தலைவராகவும் இருந்து சிறந்த பணியாற்றிய பெருமகன் எம், ஐ. குமாசாமிப் பிள்ளையவர்கள் என்பதைப் பொழிலன்பர்கட்கு யாம் அறிவிக்கவேண்டியதில்லையென எண்ணுகின்றேம். இவர்கள் எளிமையும் இனிமையும் வாய்ந்தவரேயெனினும் எடுத்த காரியத்தை இடைவிடாது முயன்று முடிக்கும் ஆற்றலும் உடையோராவர், ஆரிய அமைச்சர் இந்தி மொழியைச் சட்டத்தின் வழியே தமிழ்

நாட்டில் நுழைத்துத் தமிழ்மொழிக்கு இடுக்கண் விளைத்தகாலையில் தமிழர் படைதிரட்டித் தளர்ந்தவயதில் அப்படைக்குத் தலைமை தாங்கிச் சென்னைவரை நடந்துசென்று வென்றி முழக்கெழும்பக் கடமையைச்செய்து முடித்தனரெனின் இவர்கள் உளத்திண்மை யினையாம் எங்ஙனம் போற்றுதிருத்தல் கூடும்? தமிழ்மொழியால் பெரும்பயன் அடைந்தோர் தலைமறைவாய் ஒளிந்தொழிய, "தளர்ந்த வயதினனாயினும் யான் ஒரு தமிழன், தமிழ்நாட்டில் தமிழர் படைக்குத் தலைமை தாங்கித் தமிழ்மொழியைப் போற்றுவேன்" என அஞ்சா நெஞ்சுடன் ஆரிய அடக்குமுறைச் சட்டங்களையும் பொருட்படுத்தாது ஆண்மையொடு அன்று படையை நடத்திச் சென்று தமிழ்மொழியை இந்திக் கொடுமையினின்றும் காப்பாற்றி னார்கள். இத்தகைார் 25—3—44ஆம் நாளில் அண்ணாமலைப்பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற பேரவைக்கூட்டத்தில் (Senate) தமிழ்மொழி பயின்றோர்க்கு வடமொழியில் "**வித்துவான்**" எனப்பட்டமளித்தல் கூடாது; தனித் தமிழ்ச்சொல்லாய "**புலவர்**" எனும் பட்டத்தையே அளிக்க வேண்டுமெனும் முடிபினைக் கொண்டுபோய், எதிர்ப் பின்றி யாவரும் ஒருமுகமாக ஒப்புக்கொள்ளும் வண்ணம் செய்து தாம் கொண்டு சென்ற முடிபினை அவையில் நிறைவேற்றி வாகை சூடினார்கள். இவர்கள் வென்றிக்கு உறுதுணையாக இருந்த நம், மகாமகோபாத்தியாய, பண்டிதமணி, மு. கதிரேசச்செட்டியாரவர் களையும், தமிழுணர்ச்சி பழுத்துள்ள அப்பல்கலைக்கழகப் பேரவை (Senate) உறுப்பினர்களையும், அவைத்தலைவராகிய பல்கலைக்கழகத் துணைவேந்தர் தமிழர் தலைவர் எம். இரத்தினசாமி அவர்களையும் யாம் உளமாரப் பாராட்டுகின்றோம். இப்பெரியோர்கள் திருவுளங் கொண்டு இத்திருத்தத்திற்கு முன்பு வித்துவான் என்ற பட்டம் பெற்றவர்களும், விரும்பினால் வித்துவான் என்பதை மாற்றிப் புலவர் என அமைத்துக்கொள்ளலாமெனவும் சட்டத்தின் மூலம் ஆணையிட் டருள வேண்டுகின்றோம்.

இப் பல்கலைக்கழகப் பேரவையின் முடிபினைச் சென்னைப் பல்கலைக் கழகமும் பின்பற்றுமாயின் தமிழ்நாடெங்கணும் வித்து வான் என்ற வடமொழிச்சொல் ஒழிந்து **புலவர், புலவர்** எனும் ஒலி முழங்குமன்றோ? சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராயிலங்கு கின்ற பெருமகனார் பேரறிஞர் (Dr.) A. இலக்குமணசாமி முதலியார் அவர்கள் தமிழ் மொழியின்மாட்டு அளவுகடந்த காத லுடையவர்கள். அவர்கள் இதனை உளங்கொள்வார்களானால் இவ்வித்துவான் என்ற வடமொழிப் பட்டத்தை மாற்றிப் புலவர் என அமைத்தல் மிக எளிதாக முடியும் என்பதை அன்பர்கள் நன்கறி வார்கள். அவர்கள் உளங்கொண்டு தமிழ் நாட்டில் பண்டைக்காலம் போல எத்திசை நோக்கினும் புலவர், புலவர் எனும் பேரொலி முழங்கப் பேரருள் புரிந்து புகழ்கொள்வார்களாக.

தமிழ் மாணவர்கள் எத்துணையோ ஆண்டுகள் உழைத்துத் தமிழ் நூற்களைப்பயின்று தாம் தமிழ்பயின்றமைக் கறிகுறியாகப் பல்கலைக் கழகத்திலும், பிற இடங்களிலும் பட்டம் பெறுங்கால் "**வித்துவான்**" '**பண்டிதர்**'' என வடமொழிச் சொற்களாலாய பட்டங்களைப் பெற

வேண்டுமெனச் சட்டத்தின் வழியே பல்கலைக் கழகங்களால் வற்புறுத்தப் பெறுகின்றனர். ஆங்கிலமொழி பயின்ற மாணவர்கட்கு, ஆங்கில நாட்டில் அம்மொழி பயின்றமைக் கறிகுறியாகப் "**புலவர்**" எனுந் தமிழ்ச் சொற்பொறித்த பட்டத்தையளித்துப்போற்ற ஆனிலையப்பல் கலைக்கழகம் (Oxford University) மொழியியல்புக்குமாறாக முற்படுமா? இரானிய நாட்டில் அந்நாட்டுமொழி பயின்றோர்க்கு இரானியப் பல் கலைக் கழகம் 'வித்துவான்' பண்டிதர், என்றபட்டங்களை அளித்து மகிழுமா? செருமானியர் நாட்டில் செருமானியப் பல்கலைக் கழகம் அந்நாட்டு மொழிபயின்றோர்க்கு, "**சிரோன்மணி**" பட்டம் வழங்கிப் போற்றுமா? ஆந்திரா பல்கலைக்கழகம் தெலுங்கு மொழிபயின்ற மாணவர்க்குச் செந்நாப்புலவர் எனும் பட்டம் வழங்குமா? தமிழ் நாட்டில் தமிழ்மொழி பயின்ற மாணவர்கட்கு வித்துவான், பண்டிதர் என்ற வடமொழிப் பட்டங்களை வழங்கி, **ஆரியமொழிக்குத் தமிழர் என்றும் அடிமைகள்** என்பதனை உலகிற்கறிவிக்க ஆரியர் தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களின் வழியே மிக மிகச்சூழ்ச்சி முறையில் முயன்று நிறுவியுள்ள இப்பட்டங்களை மானமுடைய தமிழ்மக்கள் ஏற்று மகிழ்தற்காமா? தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்கள் ஆய்ந்துபாராமல் தமிழ்மொழிபயின்றோர்க்கு வடமொழியிற் பட்டங்கள் வழங்கிவந்தன. தமிழ்மொழிப் புலவனாயினும் ஆரிய இலச்சினையாகிய வித்துவான் என்ற பட்டத்தை ஏற்றுக்கொண்ட பின்னரேயே அவன் இந்நாட்டில் ஆசிரியர் தொழில்புரிந்து வாழவோ, அரசியலாரும் அவனை ஆசிரியனென ஒப்பி ஊதியமளிக்கவோ இயலும் எனும் நிலைமை நடைமுறையில் இத்தமிழ் நாட்டிலிருக்குமாயின், இந்நாடு இருந்தென்? அன்றிக் கடற்கோள், மண்ணடுக்கம் (பூகம்பம்) முதலியவற்றால் சிதைந்தொழியினென்? தமிழ் மக்களின் இழிநிலைமையுணர்ந்த எம் தலைவர் இராவுசாகிபு, ஐ. குமாரசாமிபிள்ளை அவர்கள் இன்று இவ்வடுவினைத் துடைத்தருளினார்கள். அரசியலாரும் இனி, பண்டிதர் ஊதியத்திட்டம் (Pandits Scale.) என்பதை மாற்றிப் புலவர் ஊதியத்திட்டம் என அமைத்தருள வேண்டுகின்றோம். தமிழ் மக்கள் அதற்குரிய கிளர்ச்சியினை மேற்கொண்டாற்றி வென்றி கொள்வார்களாக.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இதுபோதேனும் வித்துவான் பட்டத்தை மாற்றிப் புலவர் என வழங்கும் வண்ணம் செயலாற்றிய தமிழர் படைத்தலைவரின் தனிப்பெரும் வென்றியினை யாம் பாராட்டுகின்றோம். இவர்கள் தமிழ்த்தாயின் தண்ணருளால் எல்லா நலனும் பெற்று மேலும் பற்பல தமிழ்ப்பணி புரிந்து நீடூழி வாழியர் என வாழ்த்துகின்றோம்.

நாட்டார் பிரிவெமை நடுங்கச் செய்தது.

28—3—44ஆம் நாள் 10 மணிக்கு, **நாவலர், பண்டித, ந. மு. வேங்கடசாமிநாட்டாரவர்கள்** நம்மைவிட்டகன்று, இறைவன் திருவடி நீழல் அடைந்த கடுஞ்செய்தியை இத்தாரண ஆண்டின் தொடக்கத்தே பொழிலன்பர்கட்கு அறிவிக்க நேர்ந்தமை குறித்து மிகமிக வருந்துகின்றேம். நம் நாட்டாரவர்கள் வாழ் நாளெல்லாம் தமிழ்ப்பணி புரிதலையே பேறெனக்கொண்டவர் கள். நம் சங்கந்தோன்றியநாள் தொடங்கிச் சங்கத்தின்பாற் றொடர்பு கொண்டு நம் சங்கம் இந்நன்னிலையுற உழைத்த பெரி யோர்களுள்நம் நாட்டாரும் ஒருவராவர். இவர்கள் திருச்சிராப் பள்ளி, **எஸ். பி. ஜி. கல்லூரியிலும், அண்ணமலைப் பல்கலைக்கழகத் திலும்** தமிழ்ப்பேராசிரியராகவமைந்து பணியாற்றி ஒய்வுபெற்று இத் தஞ்சைமாநகர்க்கு வந்து தங்கியிருந்தார்கள். தஞ்சைக்கு வந்து தங்கியிருந்த சின்னாட்களுள் ஒரு நாள் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தே நிகழ்வுற்ற நிறைவேற்றுக் கழகக் கூட்டநாளில் சங் கத்திற்கு வந்தவர்கள் கூட்டம் தொடங்குதற்குமுன் சங்கத்தின் அண்மையிலுள்ள வேப்புமன்றத் தடியில் அமர்ந்திருந்தனர். அதுபோழ்து நம் சங்கத்தலைவர் **இராவுசாகிபு, செந்தமிழ்ப்புரவலர், தமிழவேள், த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள்** சங்கத்திற் குள் நுழைந்து நாவலரவர்களைக் கண்டவுடன் அருகிற் சென்று மார்புறத்தழீஇக் கண்ணீர் மல்கத் " தங்களைப் பல்லாண்டுகட்கு முன்னரேயே சங்கத்திற்கு வந்திருந்து தமிழ்ப்பணி புரிய வேண் டினேன். தங்கட்குரிய பதவி இதுபோழ்து காத்து நிற்கின்றது. **கரந்தைப் புலவர்கல்லூரி** சென்னைப்பல்கலைக் கழகத்துடன் இணை புப்பெற்றுவிட்டது. இக்கல்லூரிக்குத் தலைமைதாங்கத் தக்கார் தமிழ் நாட்டிற்றங்களையன்றி வேறு யாருளர்? தாங்கள் தடுத் துரையாது இப்பதவியினை ஏற்றுக்கொளல் வேண்டும்." என உளங்கசிந்துரைத்தார்கள். தமிழவேளுரைகளைச் செவிமடுத்த நாவலரவர்கள், "யான் ஏறக்குறைய முப்பது ஆண்டுகட்குமேல் கல்லூரிகளிலேயே நீளத் தொடர்புகொண்டிருந்தேன். என் வாழ்நாளின் பிற்பகுதியிலும் கல்லூரியிலேயே தொடர்பு கொள்ளவேண்டுமெனத் திருவுளக் குறிப்பிருந்தால் யான் என் செயக் கடவேன்? தாங்கள் கூறிய மொழிகளைத் தடுத் துரைக்க அஞ்சுகின்றேன், சிறிது காலம் யான் நடுக் காவிரிக்குச்சென்று, ஒய்வுபெற்றிருந்து மகிழ்வுறக்காலங்கழிக்க எண்ணிவந்தேன். வன்றொண்டராகிய தாங்கள் என்னை வழியில் வளைக்கின்றீர்கள். சில ஆண்டுகள் எனக்கு ஒய்வுதரல் ஆகாதா?" என மறுமொழி கூறினார்கள். நாவலரவர்கள் மொழிகளைக் கேட்ட தமிழவேள் அவர்கள், "ஐயா அவர்களே தடுத்துரைத்தால் யான் கல்லூரித் தலைவராக யாரைத் தேடிச் செல்வது? யான் வன்றொண்டன் அல்லேன்; இன்றொண்டிற்கு

உங்களை வேண்டுகின்றேன். இது குறித்துப் பின்னர் உரையாடுவோம். கூட்டத்திற்கெனக்குறித்தகாலம் இதுவாகையால் வாருங்கள் கூட்டத்திற்குச் செல்லுவோம்'' எனப் பிணைத்த கையுடன் கூட்டத்திற்கு நாவலரவர்களை அழைத்து வந்தார்கள். வரும் வழியில் நாவலரவர்கள் தமிழவேளவர்கள் முகத்தைக்கூர்ந்து நோக்கி இஃதுஎன்ன! என்றுமில்லாப்பரிவுடன் இன்றுசேரமான் செல்வக்கடுங்கோ வாழியாதன் கபிலர் கையை இறுகப் பற்றினாற்போலப் பற்றிக்கொண்டுள்ளீர்களே'' எனப் புன்முறுவல்தோன்ற மொழிந்தார்கள். தமிழவேள் அவர்கள், ''பழந்தனம் இழந்ததைப் பெற்றால் யான் பற்றிக்கொள்ளாது விட்டுவிடுவேனா?'' எனமறுமொழி புகன்று முறுவல் பூத்தார்கள். தமிழ்ப்பெருமன்றம் வரையில் இவர்கள் இவ்வாறே மாறி மாறி உரையாடிக்கொண்டு சென்ற காட்சி இன்றும் எம் உளத்தை உருக்குகின்றது.

''நிறைவேற்றுக்கழகம் நிகழுமிடம் மறை மொழிவழங்குமிடமாயிற்றே, யான்போதரலாமா?'' என நாவலரவர்கள் தமிழவேளவர்களை நோக்கிக்குறிப்பாகக்கேட்டார்கள். தமிழவேளவர்கள்''புலவர்தலைவராய தாங்களறியா மறைமொழி இக்கரந்தைத் தமிழ்ச்சங்கத்தில் நிகழுமேல் ''கழகம்'' என்ற சொற்குச் சூதாடுமிடம் என்றபொருளும்கொள்ளுதல்போல''இக்கரந்தைத்தமிழ்ச் சங்கம்'' என்றசொற்களுக்கும் வேறுபொருள்கொள்ளநேரிடுமாகையால் தாங்கள் தடையின்றிக் கூட்டத்திற்கு வரலாம்;'' என அழைத்துவந்தனர். கூட்டநிகழ்ச்சிகள் முடியும்வரையில் நாவலர் அவர்களைத் தம்பக்கலிலேயே இருக்கச்செய்து கூட்டமுடிந்தவுடன்நிறைவேற்றுக்கழக உறுப்பினர்களையும், ஆசிரியர்களையும் மாணவர்களையும் அழைத்து அமரச் செய்து தமிழவேளவர்கள் எழுந்து நின்று ஒரு சிறு சொற்பொழிவு ஆற்றினார்கள். ''இன்று நம் சங்கத்திற்கு ஒரு நற்பேறு கிடைத்துளது. கரந்தைப் புலவர் கல்லூரி சென்னைப்பல்கலைக் கழகத்தாரது ஒப்புதல் பெற்றவுடன், கல்லூரித்தலைவராக இருத்தற்குத் தமிழ் நாட்டின் ஒப்பற்ற புலவர் பெருமான் நம் நாவலரவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர். இப்பேற்றினும் சிறந்தபேறு நமக்குக் கிடைக்குமோ?'' எனப்புன்முறுவல்பூத்த முகத்துடன் தமிழவேளவர்கள் மொழிந்தகாலை, நாவலரவர்கள், ''இஃதென்ன? தாங்கள் பொய்புகல்கின்றீர்களே! தமிழவேளாயின் தங்கள் ஆணைமொழிக்கு மறுமொழி இல்லைபோலும்!'' என மொழிந்தார்கள். தமிழவேளவர்கள் மேலும் பேசும்பொழுது, ''நாவலர் வேண்டுமேல் பொய் நவிலலாம், யான் எற்றிற்குப் பொய் கூறப் போகின்றேன். நாவலர் எங்கட்கு உரியார். உரியாரை உரிய இடத்தில் இருத்துகின்றோம். அவர் பொய்கூறித் தப்பிப்போகப் பார்க்கலாம். யாங்கள் விடப்போவதில்லை.'' என மொழிந்தார்கள். நாவலரவர்கள் ''யான் உரியேனேயன்றி உடைமைப்

பொருள் அல்லேனே; உடைமைப் பொருளென என்னை ஆள நினைக்கின்றீர்களே'' என மீட்டும் மொழிந்தார்கள். தமிழ வேளவர்கள், ''ஆம் தாங்கள் எனக்கு உடைமைப்பொருள் அல்லீர்; எம் சங்கத்திற்கு உடைமைப்பொருளா யுள்ளீர்கள்; சங்க உடைமைப்பொருளாகிய தங்களைச் சங்கத்தின் எப்பகுதி களிலும் அமைத்து ஆள எங்கட்கு உரிமையுண்டு'' என மொழிந்து, பல்லாருக நாவலரவர்களுடைய புலமைத்திறன், ஆராய்ச்சித்திறன் முதலியவற்றைக் குறித்துச் சிறப்பித்து, அரை மணிநேரம் சொற்பொழிவாற்றிக் கல்லூரித் தலைவர் பதவியை ஒப்புக்கொள்ளச் செய்தார்கள். நகையும் பெருமிதமும் அன் புங் கஞலத் தமிழவேள் அன்று பேசிய சொற்கள் இன்றும், எம், செவிகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

இங்ஙனம் வலிந்து பற்றி நாவலரவர்களைக் கரந்தைப்புலவர் கல்லூரிக்குத் தலைமை தாங்கச் செய்து மகிழ்ந்த தமிழவேளவர் கள் துடுமென இறைவன் திருவடி நீழல் அடைந்து எமக்குப் பெருந்துயர் விளைவித்தனர். தமிழவேள் பிரிவால் உளம்தளர் வுற்று வருந்தினேமாயினும், அவரால் நிறுவப்பெற்ற ''**கரந்தைப் புலவர் கல்லூரி**'' செழிப்புறவேண்டுமேயெனக் கருதி ஒருவாறு நம் நாவலர்கள் கூறிய ஆறுதல் மொழியால் தேற்றமுற்று, இச் சங்கத்தே தங்கி எமக்குற்ற இடுக்கண்களையெல்லாம் பொருட் படுத்தாது பணிபுரிந்து வந்தேம். இன்று எம் கரந்தைப்புலவர் கல்லூரித்தலைவர் நாவலர், நாட்டாரவர்கள் தமிழவேள் அவர் களைத் தேடி, அவர்சென்ற இடத்திற்குச் சென்றுவிட்டனர். தமிழவேள் பிரிவுத்துயர் தணிவுறுதற்குள் இங்ஙனம் துயரின் மேல் துயர் விளைத்து நம் நாட்டாரவர்களும் மறைந்தனரே என் செய்வேமென நடுங்குகின்றேம். தஞ்சைமாநாட்டில் தமிழர் தலைவராகி, தமிழர்களின் தனிப்பெருஞ் செல்வமாய், ஐயாற்றில் தமிழ் தழைக்க வழிகோலிய பெருமகன், சர். ஏ. டி. பன்னீர் செல்வம் முன்மறைந்தார் ; தமிழவேள் பின் மறைந்தார்; இன்று நாவலரவர்களும் மறைந்தொழிந்தனர். அரசியற் செல்வரும், மொழிப் புரவலரும், மொழி நாவலரும், ஒருவர்பின் ஒருவராக அடுத்தடுத்துமறைந்தமைஆற்ருெணுத்துயரினை விளைவிக்கின்றது.

இங்ஙனம் துயரின்மேல் துயரின்மேல் துயரின்மேல் துயராக எமக்குற்ற இடுக்கண்கள் எம்மை மிகுதியும் வருத்தா நின்றன. இத்துன்பம் நீங்கும் நாள் எந்நாளோ? நாவல ரவர்கள் கரந்தைப் புலவர் கல்லூரித் தலைவர் என்ற அளவில் நில்லாமல், கல்லூரித் தொண்டராகவும், ஆசிரியராகவும், மாணவர்கட்குப்பாடம் உரைக்கும் வகையில் தாம் ஒரு மாண வராகவும், கல்லூரிவளர்ச்சிவேண்டித் தாம் ஒரு புரவலராக வும் திகழ்ந்தார்கள். ஈளைநோயால் பீடிக்கப்பெற்று உடல் மெலிவுற்று எப்பொழுதும் இருமலால் துன்புறுவாராயினும்,

யாம் அவர்களைக்கண் டுரையாட அணுகும்பொழு தெல்லாம் கல்லூரி! கல்லூரி!! கல்லூரி!!! என்றே கனிவுதோன்றக் கல்லூரியைப்பற்றி வினவுவார்கள், "**எவ்வாற்றாலேனும் தமிழ வேளால் நாட்டப்பெற்ற இக்கல்லூரி தமிழ்நாட்டில் நிலை பெற்று நற்றொண்டு புரிந்து நற்புகழ்கொண்டு விளங்கவேண்டும் என்பதே என் அவாவாகும்**" எனப் பன்முறையும் எம்மிடம் வலியுறுத்திக் கூறியுள்ளார்கள். இளைப்பு மேலிட்டுக் கால் சிறிது வீக்கங் கண்டிருந்த காலையிற் "புலவர் கல்லூரிக்கெனப்பொருள் திரட்டுதற்குச் **சங்கத்தலைவர், இராவுசாகிபு, ஐ. குமாரசாமிபிள்ளை** அவர்களையும் அழைத்துக்கொண்டு கோயம்புத்தூர் முதலிய நகரங்கட்குச் செல்ல எண்ணியுள்ளேம்" என எம்மிடம் மொழிந்தார்கள். "ஐயா அவர்கள் உடம்பில் வீக்கம் இருக் கின்றதே; புகைவண்டியில் நீண்டவழி, சென்றுவருதற்கு உடல் இடந்தருமோ என அஞ்சுகின்றேம்; எண்ணிச் செய்யுங் கள்" என மொழிந்தேம். "என்ன அவ்வாறு கூறுகின்றாய்? 'வினைப்போகமே ஒரு தேகங்கண்டாய் வினைதானொழிந்தால், தினைப்போதளவு நில்லாது கண்டாய்' என ஆன்றோர் கூறிய மொழிகளை அறவே மறந்தாய் போலும்! **கரந்தைப் புலவர் கல்லூரிக்கென நிதிதிரட்டச் சென்று யான் வழியில் மறைந்தே னாயின் என்பால் அன்புடைய சிலர் யான் தலைவனாயிருந்து பணி புரிந்த இக்கல்லூரியை ஓம்புதல் கடனென** எண்ணி **ஒருணர்ச்சி பெற்று, இக்கல்லூரியை ஓம்படை புரிவரன்றோ? ஒரு கல்லூரி வளர்ச்சிவேண்டி, யான்ஒருவன் மறைந்து ஒழியினும் கவலையில்லை. அது குறித்து நீ அன்புரையாற் றடை விளைவிக்காதே**" எனக் கடிந்துரைத்தனர். உடற்றளர்ச்சியையும் பொருட்படுத்தாது சங்கத்தலைவருடன் கோயம்புத்தூர் முதலியநகரங்கட்குச்சென்று ஆண்டுள்ள பெருஞ்செல்வர்கள்பா லணுகி மூவாயிரம் வெண் பொற்காசுகட்கு மேலும் கையெழுத்திடச் செய்து பெற்று வந்தார்கள். இச்செயலையும் அவர்கள் கூறிய வாய்மொழி களையும் தமிழ்நாட்டுச் செல்வர்கள் கூர்ந்து நோக்க வேண்டு கின்றோம். நாவலரவர்களது பிரிவு நம், புலவர் கல்லூரிக் கும், சங்கத்திற்கும், தமிழ்மொழிக்கும் ஈடுசெய்ய முடியாத ஒரு பேரிழப்பு என்பதில் ஐயமுண்டோ? நாவலரவர்கள் தமது இல்லில் நிகழும் சிறப்பு நிகழ்ச்சிகட்கெல்லாம் கரந்தைப் புலவர் கல்லூரி மாணவர்களையும் ஆசிரியர்களையும் அழைத்துத் தாமும் உடனிருந்து உண்டு மகிழ்தலையே பேறெனக் கொண்டு பல நாளும் கல்லூரி மாணவர்கட்கும் ஆசிரியர்கட்கும் சிற்றுணவும் பேருணவும் அளித்துக் கல்லூரியின்பாற் றமக்குள்ள அன்பினைப் புலப்படுத்திப்போற்றினர்கள். ஆசிரியர்கள் குறைகளைக்களை தலினும், மாணவர்கள் குறைகளைப் போக்குதலினும் பிறர் எவர்க்கும் அஞ்சாது செயலாற்றினர்கள். கரந்தைப் புலவர்

(தொடர்ச்சி 22-ஆம் பக்கம் பார்க்கவும்.)

நாவலர், பண்டித,

ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்களின்

கல்லறையில் ஆற்றிய சொற்பொழிவு.

நாவலர், பண்டித, ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் தமது பிறப்பகமாகிய நடுக்காவிரியில் 28—3—44ஆம் நாள் காலை 10 மணிக்கு இறைவன் திருவடி நீழலடைந்தனர். அவர்களதுடல் 29—3—44ஆம் நாள் மாலை நடுக்காவிரிக்கரையின்கண் கல்லறையிலடக்கஞ் செய்யப்பெற்றது. அவர்களுடல் கல்லறையின்கண் திருநீற்றாலும், செம்மண்ணாலும், மணலாலும், உப்பாலும் கழுத்தளவு மூடுற்றபின், அக்கல்லறையின் முன்னே நின்று பொழிலாசிரியர் கோ. சி. பெரியசாமிப்புலவரவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவு :—

நாவலரேறே! எம்மினின்றும் நீவிர் பிரிந்து சென்றுவிட்டீர்கள். தங்கள் பிரிவு என் உளத்தைப் பிளக்கின்றது. அன்று ஒரு மன்னன் நாட்டினின்றும் பிரிந்தான். அவன்பிரிவுக்கு ஆற்றாது வருந்திய, அந்நாட்டு அஃறிணைப்பொருள்களின் நெகிழ்ச்சியையும் எழுதப்போந்த புலவனொருவன் "ஆவுமழுத, அதன் கன்றழுத, அன்றலர்ந்த பூவுமழுத, புனற் புள்ளழுத...காவுமழுத" என எழுதிக் கதறினான். இன்று நின் பெரும் பிரிவைக் குறித்து யானென் சொல்லிக் கதறுவேன்! புலவர்பெருமானே! இன்று எங்கரந்தைத் தமிழ்ச் சங்கம், ஆண்டு விழாவில் தலைமை தாங்கி அணிசெய்வித்த அரும்பெருந் தலைவனை இழந்தது. கரந்தைத் தமிழ்ப் பெருமன்றம், இழுமென் மொழியால் விழுமிய நுவலும் புலவரையிழந்தது. எங்கரந்தைப் புலவர் கல்லூரி சிறந்த தலைவனை இழந்தது. எங்கரந்தைப்புலவர் கல்லூரி மாணவர்கள் திரிபொடு பஃறலை தெரிவிருள் பல்லவும், திட்ப நுட்பம் வாய்ந்த தெளிவுரைகளால் போக்கியருளும் தீந்தமிழாசானை இழந்தார்கள். தேனருவியென வொழுகிச்செல்லுஞ் செழுந்தமிழுரைகளைச் செவிமடுத்து மகிழும் பேற்றினை இத்தென்றமிழ் நாட்டவையோர் இழந்தனர். சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தார் தங்கள் விருப்பின் வண்ணம் செயலாற்றி மகிழ்விக்கும் வீறுடைப் புலவனை இழந்தனர். திங்கள் வெளியீடுகளாகிய செந்தமிழ்ச் செல்வியும், தமிழ்ப்பொழிலும் சிறந்த எழுத்தாளனை இழந்தன. தமிழ்த்தாய், தன் முடிமணியனையானை, கண்மணியனையானை இழந்தனள். பெரும! நின்னால் சிறந்த வுரை பெறவிருந்த தமிழ் நூல்கள் அப்பேற்றை இழந்தன. பெரியோனே! இவ்விருபதாம் நூற்றாண்டில் சிறந்தவுரையாசிரியனாகத் திகழ்ந்தனையே! பண்டை உரையாசிரியர்களால் உரை காணாது விடப்பெற்ற, சிலப்பதிகாரப் பகுதிகட்கும், அகநானூற்றிற்கும், மணிமேகலைக்கும் சிறந்தவுரையெழுதியளித்த நின் கைகளை அந்தோ! இதுபோது மடக்கிக்கட்டி இவண் இக்கல்லறையில் வைத்துள்ளனரே! இக் காட்சியைக் கடைசியிற் காணவோ யானிவண் போந்தேன்? பெருமானே நினது அறுபதாமாண்டின் நிறைவு விழாவில் நினக்கு அணிமலர் சூட்ட எண்ணிய பாவியேன் கையினால் இன்று நின் பிணவுடற்கு மாலை சூட்டினேனே. கள்ளர் கோமானே! களிற்றியானை நிரைக்குக் கனிவுறும் உரை விரித்த நின்வாய் இன்றுகட்டப் பெற்றுள்ள காட்சியையா யான் காணவேண்டும்? "இன்றைக்கோ கம்பனிறந்தநாள்—இன்றைக்கோ........பூமடந்தை வாழ, புவிமடந்தை வீற்றிருக்க, நாமடந்தை

நூலிழந்த நாள்'' எனக் கம்பனிறந்த அன்று அக்காலப் பொறாமைப் புலவரும் நா நடுங்கிக்கூறினர். இன்றுயான் என்செய்வனென நடுங்குகின்றேன், என்னடுக்கமகல ஓர் நல்லுரை கூறீரோ? தொல்காப்பியத்திற்கெழுதிய நல்லுரைகளைத் துகளற எமக்குணர்த்திய தோன்றலே! கல்லூரித் தலைவர் நீவிரேயாயினும் யானே கல்லூரித் தலைவனென எண்ணி இறுமாப்புடன் எவற்றிற்குமஞ்சாது ஏறுபோற் பீடு நடைகொடு இந்நாட்டில் உலவினேனே! இனி யார் தலைமையில் யான் பணிபுரிவேன்? நின் அறுபதாமாண்டுவிழாச் சொற்பொழிவை இக் கல்லறையிலா யான் நிகழ்த்தவேண்டும்? ஐயனே! இன்னும் இரண்டு திங்கள் கழித்து நீவிர் எம்மைவிட்டு அகலொணாதோ! கொடிது! கொடிது! அறிஞ! நீ பிரிதல் கொடிது. பேயொடு கூடினும் பிரிதல் கூடாதென ஆன்றோர் கூறினரே! அப்பொன்னுரையை மறந்தனிர் போலும்! உற்றாரை யான் வேண்டேன் ஊர் வேண்டேன் பேர் வேண்டேன் நின்னைத் தலைவனாகப் பெற்று நின் தலைமையின் கீழ்ப் பணிபுரிதலையே பேறென என்றும் வேண்டுவேனென யானன்று மொழிந்தனனே. அவ்வுரையைப் பொய்யுரையாக்கி அகன்றீரே! இது சான்றாண்மைச் செயலாகுமா? எந்தலைவ! இளங்கோவடிகள் கழக ஆண்டு விழாவில் நிற்களித்த வாழ்த்திதழில் 'வாழி யிவன் மகிழ் பெயரார் மக்களெலாம் நலன்பெற்று வாழிவாழி' எனயான் பொறித்திருந்தமை கண்டு மகிழ்ந்து, "அன்பர்களுடைய வாழ்த்து நீண்டநாள் ஒருவனை வாழ்விக்கும் என்னுந் துணிபுடையேன். இவர்கள் கூறிய வாழ்த்துப்பாவில் 'வாழியிவன் மகிழ்மக்கள் என்று குறிப்பிடாமல், பெயரார் மக்களெனக்குறிப்பிட்டுள்ளமையால் என் பெயரர்களுக்குத் திருமணம் நிகழ்ந்து, அவர்கட்கு மக்கட்பிறந்து, அம்மக்களையும் யான் காணவேண்டுமென்று விரும்பி வாழ்த்தியுள்ளார்கள். அவ்வாறே யான் நீடு வாழ்ந்து கண்டு மகிழ, விரும்புகின்றேன்'' எனக்கை தட்டொலியிடை மொழிந்தீரே! இவ்வளவு விரைவில் மறைவினைக் குறிப்பாகக் கொண்டு அன்றும் மறைமொழியாக இவ்வுரைகளை வாயாற் கூறினீர்போலும்!

அன்பர்களே! நம் நாவலரவர்கள் நம்மைவிட்டுப் பிரிந்தார்கள். "தனித்தமிழ் பயின்றோர் ஆராய்ச்சி நூல்கள் எழுதுதற்குத் தகுதியில்லாதவர்'' எனக் கழறுவோர் கூற்றை வெட்டி வீழ்த்தி ஆங்கிலம் பயின்றோரும் எழுதற்காகா ஆராய்ச்சி நூல்கள் எழுதி வெளியிட்ட எம் அறிஞர் தலைவர் மறைந்தார். இத்தமிழ் நாட்டில் சிறந்த வுரையாசிரியராகவும், ஆராய்ச்சியாளராகவும், பேராசிரியராகவுந் திகழ்ந்த நம் நாவலரவர்கட்கு நந்தமிழர்களின் ஆதரவு ஒருமுகமாகக் கிடைத்திருப்பின், முன்னரேயே எத்துணையோ சிறப்புப் பட்டங்கள் இவர்கட்கு அரசாங்கத்தாரா லளிக்கப்பெற்றிருக்குமென்பதற் கையமுண்டோ? தமிழ் நாட்டில் சிறந்த ஆராய்ச்சி நூல்களைச் சீர்தூக்கிப் பரிசளிக்க எண்ணி அரசாங்கத்தார் நூற்றேர்வில் சிறந்த நூல் இவையெனத் தேறின், இவர்கள் எழுதியுள்ள கபிலர், நக்கீரர், கள்ளர் சரித்திரம் முதலிய ஆராய்ச்சி நூல்கட்கன்றிப் பிற நூல்களுக்கு முதற்பரிசு கிடைக்குமோ? இலக்கிய நூல்களிற் றோய்ந்து சுவை யுணர்ந்து உணர்த்தும் ஒருவர்க்குப் பரிசளிக்கக் கருதின் இவர்கள் எழுதித் தொகுத்துள்ள கட்டுரைத் திரட்டைக்கண்டபின் வேறு ஒருவற்குப் பரிசளித்தற்காமோ? தமிழ் நாட்டில் இவ்விருபதாம் நூற்றாண்டில் சிறந்த உரையாசிரியரைத் தேர்ந்து அவருக்குப் பரிசளிக்க எண்ணின் நம் நாட்டாரவர்களன்றிப் பிறர் யாரப் பரிசினைப் பெறவல்லார்? சமயச் சார்பான புராணங்களும், தேவாரத் திருமுறைகளும், சைவ சித்தாந்த சாத்திரங்களும் நம் நாட்டாரவர்கட்கு உயிரென இனித்தன. சங்க நூல்களில் மிகக் கடினமான

பாடல்களுக்கும் எளிதின் உரை விரித்துணர்த்து மாற்றல் இவர்கட்கென அமைந்து கிடந்தது. தாமே பயின்ற தமிழ்ப் பேராசிரியராயினும் எப்பேராசிரியருக்குமில்லாத சிறந்த பண்புகள் பல இவர்கள்பால் காணப்பட்டன. செருநரும் விழையும் செயிர்தீர் காட்சி செம்மல் எம் நாட்டாரவர்களே யாவார்கள். பிள்ளைத்தமிழ் முதல் பெருநூல்களனைத்துந் தம்முளத்துட்கொண்டிலங்கிய பெருமகன் எம் நாட்டாரவர்களை இன்று இக்கல்லறை மூடிக்கொண்டது. இப்பெருமகனை இக்கல்லறையுளிருத்தி இவர் முன்னின்று பேசுகின்றேன். சிறிது நேரத்திற்கு முன் நீவிர் இவர்கள் தலையில், செம்மண்ணைப் பெய்தீர்கள் ; நன்று என்னுங் குன்றிலேறித் தன் கண்களில் கண்ட அளவு தன்னுட்டையெல்லாம் புலவர்பெருமானாகிய கபிலருக்குக் காட்டி உரிமையாக்கித்தந்த சேரன் செல்வக்கடுங்கோ வாழியாதன் இன்றிருந்தானாயின் இவர்கள் தலையில் செழும் பொன்னைப் பெய்து இச்செம்மலைப் போற்றுதிருப்பனே? சற்று நேரத்திற்கு முன் இவர்கள் தலையில் மண்ணைப் பெய்தீர்கள் ; பண்டு பதினாறுநூறாயிரம் பொன் கொடுத்துப் பட்டினப்பாலையை யேற்று மகிழ்ந்த மன்னன் கரிகாற்பெருவளத்தான் இச்சோழ நாட்டிலிருந்து இன்று ஆட்சி புரிவானாயின் இவர்கள்மீது மணிகளைப் பெய்து, மார்புறத்தழீஇக் கண்ணீர் வடிக்காதிருப்பானோ? சிறிது நேரத்திற்கு முன் இவர்கள்மீது திருநீற்றை மூட்டையாகக் கொணர்ந்து பெய்தீர்கள்; "ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி மாங்குடிமருதன் தலைவனாக உலகமொடு நிலைஇய பலர் புகழ் சிறப்பிற் புலவர் பாடாது வரைக வென்னிலவரை" எனப் புலவரைச்சிறப்பித்து வஞ்சினங் கூறிய பெருமன்னனான பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் இன்றிருந்தானாயின் கொற்கைத்துறை முத்தைக் கொணர்ந்து பெய்து, தன் கண்ணீர் முத்தையும் சிந்தா தொழிவனோ? "யான் வாழுநாளும் பண்ணன் வாழியர்" என வள்ளற்புலவன் சிறுகுடிகிழான் பண்ணனைப் பாடிய மன்னன் கிள்ளிவளவன் இருந்திருப்பின் இம்மூங்கிற் பாடையிலா இவர் உடல் சுமந்து வரப்பெறும்? சிறந்த பொன் மணிகளிழைத்த முத்துச் சிவிகையிலன்றோ எடுத்துவரப் பெற்றிருக்கும். அரிதின் பெற்ற அருநெல்லிக்கனியை ஔவைக்கீத்து அவள் உண்டுவாழத் தான் மகிழ்ந்த வள்ளல் அதிகமான் இன்றிருந்தானாயின் இக்கல்லும் இட்டிகையுங் குற்றிச் செய்யப்பெற்ற இக் கல்லறையிலா இவருடல் அமர்த்தப் பெற்றிருக்கும்? பளிக்கறையிலன்றோ இவருடல் பதிக்கப் பெற்றிருக்கும்! நம் மன்னர்களை இழந்தோம்! புலவர்களைப் போற்றும் வள்ளல்களை இழந்தோம்! புலம்புகின்றோம்! இன்று தமிழ் நாட்டில் புலவர்தலைவராயிலங்கிய எம்பெருமகன் நாட்டாருடல் பிறரறியாவண்ணம் ஏதோ ஒரு மூலையிலடக்கஞ் செய்யப்பெறுகின்றது. அன்பர்களே! மொழிப்பற்று நம்மக்கட் கிருப்பின் இவ்விடுகாடுவரை இப்புலவர்பெருமானுக்குப் பூப்பந்தர் அமைத்து ஆறுதலடைவரன்றோ! வங்க நாட்டில் கவி இரவீந்தரநாததாகூர் மறைந்த நாளில் ஐயாயிரம் பேரவருடலைச் சுமந்து இடுகாடேகிக் கண்ணீர் பெருக்கித் தங்கடமையை நிறைவேற்றி மொழிப்பற்றை வெளிப்படுத்தினர். நந்தமிழர்கள் ஐயகோ! எத்துணைவர் நம் நாட்டாரவர்களின் உடலைத் தாங்கித் தொடர்ந்துவந்து கடமையைச் செய்தனர்? அந்தோ! தமிழ் நாடே! அந்தோ! தமிழகமே! புலவர்கள் புரவலராலும் பொதுமக்களாலும் போற்றி ஆதரிக்கப்பெற்றனர் என்று யான் ஏட்டில் படித்தது உண்மையாமோ? பொய், பொய், பொய்யாகவன்றோ முடிந்தது. இந்நாடு பெயர்க்கமுடியாத வடுவினை ஏற்கலாமா? தமிழர்கள் மொழிப்பற்றும் நன்றியறிவுமுடையாரென வரலாற்று நூல்கள் அறிவிக்கின்றனவே!

அவை பொய்யாயினவே! அன்பர்களே இக்கல்லறையினின்று கண்ணீர்வார
யான் கூறிய கனிவுரைகளைக் கேட்ட நீவிர் இக்கல்லறை சிதைவுற்றுக் கழுதை
புரளும் இடமாகாவண்ணம் காப்புச் செய்வீர்களாக! மேனாட்டில் சிறந்த
புலவர்களிருந்து வாழ்ந்துவந்த இல்லங்களை அவ்வரசினர் பொருள் கொடுத்து
வாங்கிப் பெரிய எழுத்துக்களால் இவ்விப் புலவர் இவ்விவ் வில்லங்களில்
இவ்விவ் வாண்டில் வாழ்ந்துவந்தனர் என எல்லோருமறியப் பெரும் எழுத்துக்
களிற் பொறித்துப் போற்றி ஓம்படை புரிகின்றனர். தமிழ் நாட்டில் தமிழர
சின்றிப் பிறர் ஆட்சி நிகழ்கின்றமையினாலே நந்தமிழ்மொழிப் புலவர்களின் பெரு
மையை யுணர்ந்து அவர்கள் போற்றார் என்பதை யாம் நன்கறிவோம். அரசினர்
போற்றாவிடினும் மொழிவளன் படைத்த புலவர் மாட்டுப் பெரும் பற்றுடைய
செல்வர்களும், புலவர்களும் இக்கல்லறையினைப் போற்றிக் காத்தல் கடனென
அறிவிக்க விரும்புகின்றேன். வேற்று நாட்டு மன்னனொருவன் ஆங்கிலநாட்டு
மன்னனைக்காண அந்நாட்டிற்கு வந்தபோது முதன் முதல் உலகப்பெருங் கவி
யாகிய செகப்பிரியர் கல்லறையெங்கேயுளதென வினவி அப்புலவர் பெருமான்
கல்லறையின்முன் சென்று அக்கல்லறைக்கு வணக்கஞ் செலுத்திய பின்னரே
அந்நாட்டு மன்னனைக் காணச் சென்றானென்று பெரியோர் கூறக் கேட்கின்
றோம். நம் நாட்டாரையா அடங்கியுள்ள இக்கல்லறையும் பிற்காலத்தில்
தமிழக மன்னர்களால், புலவர்களால், பொதுமக்களால் போற்றி வணங்கு
தற்குரிய கோயிலாக விளங்கலாம். இக்கல்லறையைப் போற்றிக் காத்தல்
நம்மவர் கடனன்றோ? புலவரேறே! நின்போன்று சிறந்த புலவர்களை
எத்துணையோ நூற்றாண்டு கழியினும் இனிக் காணுதற்கியலுமோ? இனி
யாருளரோ! முன்னுமில்லை என்ற மொழிக் கிணங்க இலங்கினையே!
என் செய்வேன்! இன்று மறைந்தொழிந்தனையே! என்பாலன்புகொண்டு
நெருநல் முதல்நாள் என்னினிய நண்பர் வித்துவான், ஐ. இராமையா
சேதிராயரவர்களிடம் என்னைப்பற்றிக் கூறுங்கால் “பெரியசாமி நன்றா
கச் செய்யு ளியற்றுகின்றான்; சிறந்த வுரைநடை எழுதுகின்றான்;
நாவன்மையுடன் சொற்பொழிவாற்றுகின்றான்; எச் செயலையும் விரைந்து
செய்து முடிக்கின்றான்; இவன் விரைவில் முன்னுக்கு வருவான்; இவன் முன்
னுக்கு வருவதற்குரிய ஒரு செயல் செய்ய நினைக்கின்றேன்; அச்செயலை இப்
பொழுது சொல்லமாட்டேன்; பின்சொல்லுகின்றேன்.” எனக்கூறினீராமே!
அஃதெச்செயலென்று இன்றறிவிப்பீரா? அச்செயலை யாண்டுச் சென்று
எற்காற்ற எகினீர்? ஆசிரியப் பெருந்தகையே! அழுக்காறற்று இங்கு அலையு
மாக்களிடை ஆன்றமைந்தடங்கிய சான்றோராகிய நீவிரிருந்தீரோ! நும்மையு
மிழந்தேனே! இனியாண்டுச் சென்றடைவேன்? யாரெம்மை ஆதரித்தூக்கு
வோர்? எந்தையே! என்பாலன்புகொண்டு என்னையுமோர் மகனாக்கி, கல்லூரி
ஆசிரியனாக்கி, பொழிலாசிரியனாக்கிப் போற்றிய நின்றிருவடிகட்குக் கடைசி
முறையாக என் வணக்கத்தைச் செலுத்துகின்றேன். புகழுடலிற் பொலி
வுறும் பெரியோராகிய நீவிர் என் வணக்கத்தை எற்றருள்வீராக!

நாவலர், பண்டித, ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்
மறைவு குறித்து,
அன்பர்கள் வருந்திக்கூறிய இரங்கற்பாக்கள்.

---

௧. * மெய்யோ வுரைத்த மாணவர்சொல் வேறோவறியே னாட்டாரின்
றையோவுடலை நீத்தனரோ வறுபதாண்டு நிறைநாளில்
மெய்யாப்புகழ விழைந்தோர்கள் வெந்தே கலங்கி விழுந்தாற்றி
ஐயோஐயோ எனப்புலம்ப வாற்றல் புலமைக் கழகேயோ!

௨. கள்ளர்குலத்து ஞாயிறெனக்கவின்று பெருமைப்படுத்தினாய்
அள்ளிக்கொளும்பேரழகொன்றோ அறிவுநுணுகப் படைத்திட்டாய்
விள்ளற்கரிய குணங்கொண்டாய் விழையுந்தமிழரனைவருமே
துள்ளிக்கதறப்பிரிந்தேகல் தோன்றால் புலமைக்கழகேயோ!

௩. தந்தைமகிழத் தாய்மகிழச் சான்றோர்மகிழத் தமிழ்ப்புலவர்
சிந்தைமகிழ வேங்கடமால் திகழ்ந்துமெவனோ விதுகாலை
நொந்துகலங்கி யழுதாற்றி நுவலாநிற்பப் பிரிந்தசெயல்
அந்தோ கலியின் கொடுமையிது வாமேலாற்றல் பழுதாமே.

௪. வேங்கடசாமிஐயா விறற்றமிழ்ப்புலவா வின்னல்
ஈங்கெவர்தமக்குஞ் செய்யாயென்பரே காந்தை வாழும்
பாங்குறுங்கவிஞர் வேந்தாம் பழவுணர்வொத்தநண்பன்
வேங்கடாசலமுங்கண்ணீர் ஒழுக்குற விளிதனன்றோ?

௫. மன்னுசீருமாமகேசன் வளருமெய்த்தமிழவேடான்
உன்னிலன் பிரிந்தானென்றேயுலைவுறும் பொழுதில் வந்தே
நன்னிலைப்படுத்தி மேலா நறுந்தமிழ்வளர்க்க நின்றாய்
என்னிதுமாயம் நீயுமிசைத்திலை பிரிந்தாயையோ!

௬. உவகை நின்றொளிரப்பாடி யுவப்பிக்கமடிதற்றேற்கும்
அவலநின்றொளிரப்பாடு மடைவையும் புகுத்தலாமோ
கவலுதன் மருவி நண்பர் கலங்கிநின்றுணர்வுமாழ்கல்
திவலையுமறியாயாகிச் சிவன்கழல் புகுதனன்றோ?

௭. கற்றோர்க்கினியன் கவினுந்தமிழ்க்கலைஞன்
வெற்றிகொளுஞ் சைவ விழுத்துறையிற்—பற்றாத
ஏதும் பெறவிழையா னெம்வேங் கடசாமி
தீதே பிரிந்த செயல்.

இங்ஙனம்

சித. பண்டித. நாராயணசாமி, சோதியாசிரமம், சிதம்பரம்.

---

*அண்ணாமலைப்பல்கலைக்கழகமாணவருரைப்ப அறிந்தமையைக்குறிக்கின்றது.

நாட்டார் பலரிருந்தும் நாட்டா ரெனமொழியின்
நாட்டார் வினைவினைப்பர் நற்புகழால்—நாட்டை
யளந்ததிரு வேங்கடசா மிப்பெயரோய் நாட்டார்
உளமிடமாக் கொண்டா யுவந்து.

தமிழ்த்தாயும் நாடும் தமிழ்நூலும் தக்க
தமிழ்மகவை யாய்வுநூல் தன்னைத்—தமிழுரையை
யின்றிழந்து மாழ்க இரக்கமிலாக் காலனூர்
துன்றியுயிர் கொண்டாரந் தோ.

அறிவின் றிருவுருவே யன்பின் பிழம்பே
பொறியடங்கி நின்ற புலவோய்—இறைவனடி
இன்பமுற நண்ணினையால் எந்துன்ப மெண்ணிலையால்
அன்போ அறனோ அது.

வித்துவான். செ. வேங்கடராமச் செட்டியார்,
S. V. S. கல்லூரி, திருப்பதி.

க. நாவலனே பண்டிதனே நடுக்காவே ரிப்பதியில்நண்ணி னோனே
பாவலனே தமிழர்தவப் பயனாகத் தமிழன்னை பயந்த செல்வா
மேவியவேங்கடசாமி நாட்டான்விண் ணாட்டானாய் மேவிட் டாயோ
சேவுயர்த்தோன் திருவடியிற் சேர்ந்தெம்மைத் துயர்க்கடலிற்சேர்த்திட்
[டாயோ.

உ. உன்னருப தாண்டுவிழா உயர்முறையில் செய்வதற்காய் உயர்ந்தோ
[ரெல்லாம்
உன்னினரே கழகங்கள் ஊக்கமுடன் கொண்டாடும் உறுதி பூண
இன்னயமார் தமிழகத்தில் எவ்விடத்தும் பாராட்டிஇன்பமாலே
நன்னரிருந் துனக்கணியும் நற்பேறு படைத்திலதிந்நாடு தானே.

ந. தமிழன்னை யணிசிலம்பு தனையுரைத்துக் காட்டியதன் தாம் உயர்த்தாய்
தமிழன்னை திருப்பணியாத் தாய்க்குரிய புதுப்பணிகள்சாலச் செய்தாய்
தமிழ்மக்கள் முன்னேற்றந் தனைநாடிப் பலவுரைநூல்தந்தாய் அண்ணால்
தமிழ்நாடு துன்பமெனுஞ் சலதியிலா ழப்பிரிதல் தகுதியாமோ.

ச. இனியாரை எம்நாட்டார் எனவழைப்பேம் உரைநூல்கள் யார்பாற்
[காண்பேம்
இனியவுரை நடைஎவர்பால் எய்திடுவேம் சித்தாந்தத்தியார்சொற்
[கேட்பேம்
கனியினுந்தீங் கட்டியினுங் கனிந்துறுசொற் பொழிவெவர்சொற் காதிற்
[கேட்பேம்
நனிவிரித்துச் சங்கநூல் அகம்புறங்கள் எவருரைப்ப நாங்கேட் பேமே.

ரு. தமிழன்னை தவமகனைத் தானிழந்தாள் கரந்தைவளர் தமிழ்ச்சங் கத்தார்
தமிழ்த்தலைவன் தனையிழந்தார் தமிழ்ப்பொழிலுங் கற்பகமாந்தருவி ழந்த
தமிழமுதைத் தமிழ்நாட்டார் தாமிழந்தார் இழவாதார் தாங்கள் யாரே
தமிழ்மகனும் வேங்கடசா மிப்புலவன் இறைவனடி சார்ந்த தாலே.

வித்துவான், வே. ஐயாநாயக்கர்,
தலைமைத்தமிழாசிரியர், போர்டு உயர்நிலைப்பள்ளி, போளூர்.

வெண்ணெயும் திரளும் போது விரிந்துடை தாழி யென்ன
மண்ணினில் தமிழர் நல்ல மாண்பினைப் பெறுமிக் காலம்
விண்ணினை யடைந்தா யென்னில் விளங்குவேங் கடசாமிப்பேர்
அண்ணலே அந்தோ நெஞ்சம் அடைதுயர் அறைதற் பாற்றே.

தஞ்சையென் றூலும் தண்ணந் தனிக்கரந் தையென் றூலும்
விஞ்சிய நின்னை நல்ல வியன்புல வோர்கள் எல்லாம்
நெஞ்சினில் முன்னர் எண்ண நீள்புக ழுடன்வாழ்ந் தாயே
எஞ்சலில் அறிஞ நின்னை என்றினிக் காண்பேம் அந்தோ.

மணிவிழா வாழ்த்துக்கூற மாபெரும் புலவர் நாக்கள்
இணையிலா திருந்த வன்றே இரங்கலும் கூற இன்னே
துணியுமோ அந்தோ அந்தோ துய்யசா வலனே வெய்ய
கணையது பாய்மான் என்னக் கலங்கினேம் பிரிவால் அந்தோ.

வித்துவான், ஆ. சிவலிங்கம்.

கொழுவியசெந் தமிழ்க்கனியே கோதிலாக் குடிப்பிறந்த கோவே எங்கள்
விழுமியவேங் கடசாமி நாட்டாரென் பெயர்பொருந்து மேன்மையோனே
குழுமியநண் பினர்வருந்த மனைமக்கள் சுற்றமெலாம் குழைந்து வாடத்
தழுவியபைந் தமிழ்த்தாயும் தத்தளிப்ப எங்குற்றாய் தமிழர் வாழ்வே!

பொன்னாட்டிற் புலவர்குழாம் போற்றிசைப்பப் போயினையோ பொன்வாழ் [மார்பன்
நன்னாட்டிற் செந்தமிழ்த்தீந் தேனருந்து மாகினைந்து நயந்தான் கொல்லோ
இன்னார்நன் மறையோது நான்முகன்வண் டமிழ்கற்க எற்றா னேயோ
மின்னார்செஞ் சடையிறைவன் விழைதமிழின் வேட்கையான் விரும்பினானே.

தமிழவேள் உமாமகே சுரப்பெரியோன் தான்கண்ட சங்கந் தன்னில்
தமிழ்ப்புலவர் கல்லூரித்தலைவனாய் நீயிருந்த தன்மை யாலே
இமிழ்கடல்சூழ் புவிமீது தமிழேற்றம் கேட்பவெணி ஈண்டுப் போந்து
அமிழ்தமன நினையழைத்துக் கொடுபோக அமர்ந்தாயோ ஐயோ! ஐயோ!

மாணவர்க்கும் நாவலர்க்கும் அறிவுமழை பொழிந்துவந்த வளமார் கொண்டால்
பேணவரு நுண்ணறிவுப் பிறப்பிடமே நின்மறைவாற் பெரும்பே துற்றேம்
வேணவவா மிக்கார்ந்த எனதன்ப! யாண்டுற்றாய் விழுமி யோனே
தாணிழலில் இறைதுயிற்றத் துயின்றாயோ! தமிழ்க்கடலே, தாழேம்! தாழேம்!

பூவினிலே தாமரையின் செழும்பூவே, உயர்ந்ததெனப் புகல்வ ரன்றே
காவினிலே கற்பகமே உயர்வென்ன முன்னோர்கள் கழறுவார்கள்
பாவினிலே வெண்பாவே முதன்மையென முதுபுலவர் பகர்ப செய்ய
நாவினிலே நயமுள்ளோன் நீயெனவே நாவலனாய் நவின்றார் அம்மா!

புலவர்சிந் தாமணியே! புத்தறிவின் இருக்கையே! பொன்னே போன்ற
நலவருக்கு நாயகனே! நானிலத்தோர் போற்றுகின்ற நாவல் லோனே!
பலவளஞ்சேர் சொன்மாரி பொழிபருவ மேகமே! பாரில் நின்போற்
சிலவரே னும்முளரோ தெரியகிலோம் சொல்லுதியெம் செம்மல்! செம்மால்!

இளங்கோவின் செஞ்சிலம்பிற் கேற்றவுரை வகுத்தளித்தாய் இலங்கு சாத்தன்
உளங்கவரும் சீர்மணிமே கலைநூலுக் குரைகுறையு முடியு முன்னே
வளங்கெழுவா னுலகுற்ருய் வானமிழ்தின் சுவையறிந்து மற்றந் நூலின்
விளங்குநல நடுநோக்கி ஆய்வதற்கோ சொல்வதற்கோ விளம்பு வாயே!

செ. ரெ. இராமசாமிபிள்ளை,
பாகனேரி, இராமநாதபுரம்சில்லா.

(க) திடுக்கிட்டேம் நாவலர்வேங் கடசாமி உயிர்நீத்த செய்தி கேட்டு
நடுக்குற்றேம் தமிழ்நாட்டின் கையற்ற நிலைகண்டு நலிந்து வாடி
எடுத்திட்ட நல்வாழ்வில் எண்ணற்ற பணியாற்றி இனிய நூல்கள்
கொடுத்திட்ட தமிழ்வாணர் கூற்றின்கைப் பட்டபெருங் கொடுமை
[என்னே!

(உ) சோலைநடுக் காவேரி தனிற்ருேன்றித் தமிழார்வம் சூழப் பெற்றுக்
காலமெலாம் தமிழ்த்தொண்டிற் கருத்தூன்றி ஆசிரியர் கடமை யாற்றி
ஞாலமிசைச் சிலம்பிற்கும் உரைகண்ட நாட்டாரின் உயிரை நாட்டோர்
ஓலமிடக் கொடுசெல்லக் கூற்றுவனுக் கேற்பட்ட உரிமை யாதோ?

(ங) சேரமான் இளங்கோவும் திருத்தக்க தேவரோடு சேக்கிழாரும்
மாரிபோல் அறம்பெய்த வள்ளுவரும் கம்பர்முதற் புலவ ரோடு
தீராராம் உமாமகேச் சுரர்போலும் புரவலரும் சென்ற வானிற்
சேரவே துணிவுற்றுத் தமிழ்நாட்டிற் புகழ்நாட்டிச் சென்ருர்கொல்லோ!

(ச) சித்திரையில் நாட்டார்க்கு மணிவிழாச் சிறப்பிக்கச் சிந்தை கொண்டு
எத்திசையுந் தமிழன்பர் அந்நாளை எதிர்நோக்கி யிருப்பு இன்ருே
சித்தமிகக் குலைந்தலறச் செந்தமிழ்த்தாய் ஏக்கமுறச் செம்மை வாணர்
அத்தனடி சேர்ந்தனரே! அரனேயாம் என்செய்வோம்! ஐயோ! ஐயோ!!

வெண்பா.

(ரு) வான்பாயுஞ் சோலை வளமார் கரந்தையிலே
தேன்போலுந் தெய்வத் தமிழ்ச்சங்கத்—தேமேவும்
நற்புலவர் கல்லூரி நாயகராய் நாட்டாரும்
பற்பலநாள் செய்தார் பணி.

(சு) ஆழ்ந்தகன்ற நுண்ணறிவும் அன்பருமைப் பேச்சழகும்
சூழ்ந்தவரின் நட்பேற்குந் தோற்றமுமே—வாய்ந்தொளிரும்
நாட்டாரின் நல்லுயிரை நாட்டிற்கே மீட்டளிக்க
மாட்டாதோ கூற்றின் மதி.

21, L. G. C. Quarters,
மேட்டூர் அணை P. o.
சேலம் ஜில்லா.
} புத்தனேரி, ரா. சுப்பிரமணியன்.

இரங்கற் பாக்கள்.

1. காவலரே நாட்டாரே நயமுடைய சொற்கள்பல நவிலுங்காலைப்
பாவலரே யன்றிநனி படித்தறியாப் பல்லோரும் பண்போடேற்கக்
காவலரி னுளம்பிணித்துக் கருதலரும் வேட்கும்வகைக் கவின்சொல்
[லாற்றிப்
பூவினிலே புகழ்நாட்டிப் பொன்னுலக மிந்நிலையில் புகுதல்நன்றோ.

2. பண்டிதமா முயர்பட்டம் பாரினிலே இசையொன்றப்பரிசுபெற்றிங்
கெண்டிசையு மிலங்குறுநின் னேற்றமுறு காட்சிதனதியலறிந்தே
தண்டமிழ்தா னேபயின்ற தமிழ்ப்பேரா சானென்னுந்தலைப்பைநாட்டி
மண்டலத்து மகிழ்ந்தபெரு மக்களெலா மிந்நாளில்மாழ்கின்றார்.

3. முத்தமிழின் பெருநூலை முழுதுமுணர்ந்தினிதேற்று முன்னோர்போல
இத்தலத்தோர் எமுறவே இனியவுரை இயற்றியஎம் தலைவநீதான்
வித்தகமாய் மறைந்தசெயல் வியப்பிற்கிங்குரியதென விளம்பலொன்றோ
அத்தகவே அறிஞர்களை ஆற்றொணாத்துயர்க்கடலிலாழ்த்திற்றையா.

4. நாட்டாரே நின்னைநனி நயவாத புலவரெவர் நானிலத்தில்
வேட்டாரே யன்றிமிக வியத்தகுநும் மறிவினால் வீற்றன்புள்ளம்
நாட்டதார் எவர்நினது நற்புகழை நாற்றிசையும் நாட்டஎண்ண
மாட்டாதார் எவரையா மாண்புறுத்துஞ் செயலுடையோய் மாண்டாய்
[அந்தோ.

5. பேருரையா ளரின்பிரிவு பேராசா னுளத்தையறப் பிளந்து செஞ்சொல்
எருரைசெய் புலவர்களும் இனியதமிழ்ப் புரவலரும் எங்கிநிற்க
ஒருரைசெய் மாணவர்பால் ஒல்லாவிச் செயல் புரிந்து ஒறுத்துப் பின்பு
சீருறுசெந் தமிழன்பர் செந்நாவை யூடுருவிச் சென்றதன்றே.

6. அறுபதா மாண்டினிலே அரியதொரு விழாவாற்றி ஆன்றோர் போற்ற
உறுபணிகள் பலபுரிந்த உளமெலா முருகிநனி உணர்வொன்றின்றி
மறுவுறவே இரங்கல்பல மாற்றமாய்க் கிளக்கின்ற மயலையுன்னிக்
கறுவுகொளும் மக்களது கருத்துமிக நன்றாமோ காணுங்காலே.

7. தமிழ்த்தாயின் புரவலனும் தமிழவேள் அமரர்தமைதகைத்து நின்று
அமிழ்துறழும் தமிழ்ப்புலவன் அணைகின்றா னெனையெனுஞ் சொ
[லறியச்சாற்றிக்
கமழுளத்தால் வருகவெனக் கைகோத்து நகைகூட்டிக் கனிந்தன்போடு
இமிழ்கொளவே அவ்வுலகும் இயமெழுப்பித் தலைமைதரும்
[இயல்கொள்வானே.

வித்துவான், வி. அ. அரங்கசாமிப் புலவர்,
கரந்தைப் புலவர் கல்லூரி விரிவுரையாளர், கரந்தை.

---

1. தமிழர்களின் பெருவாழ்வே! தமிழனையின் தனிமகனே!
[தமிழ்நாட் டிற்கும்
தமிழ்மொழிக்கும் மிகப்பெரிய தனிவைப்பே! தமிழறிஞர்
[தலைக்கொண் டேத்தும்
தமிழ்ப்புலவோர் தலைமணியே! தமிழ்பயிலும் தமிழிளைஞர் தகவே
[போற்றும்
தமிழிறையே! வேங்கடசாமிச் சான்றோய்! யாம்வருந்தத் தணந்தாய்
[நன்றோ?

2. குலனருளோ டிறையிறைஞ்சுங் கொள்கைமிகு மேன்மையெலாங்
[குலவப்பெற்றோய்!
கலைபயின்ற தெளிவுடையோய்! கட்டுரைக்குந் திறலுடையோய்!
[கருணை வள்ளால்!
நிலமலையும் நிறைகோலும் மலருநிகர் பேராசான்! நீபிரிந்த
அலகில்பெருந் துயர்ச்செய்தி அந்தந்தோ! என்னுவி அகற்றும் போலும்!

3. இளங்கோவின் கழகத்தே யாமளித்த வாழ்த்துரையில் எந்தால் நீதான்
உளங்கோளின் படி"பெயரர் மக்களுடன் உளமுவந்தே ஊழி வாழி!"
துளங்காத பேரின்பில் எனுந்தொடர்க்குச் சிறப்புரைகள்
சொற்றின் புற்றாய்!
உளங்கலங்கி யாமலற உயிர்நீத்தே பிரிந்தனையென் னுரைப்பேமையோ!

4. இருமலெனும் பெருமலினும் இடைவிடாப் பேருழைப்பால்
எம்பொ ருட்டாத்
திருமலியும் பல்லுரைகள் செய்தளித்தாய்! ஆய்வுரைகள் தேர்ந்து
[தந்தாய்!
கருமலியும் பொருள்பொதிந்த கட்டுரைகள் விரிவுரைகள் கனிவின் நல்கி
மருமலியும் மறுப்புரைகள் வளமோங்க வரைந்தீந்தாய்! மறைந்தாயந்தோ!

5. தீஞ்சுவைகள் மிகச்சொட்டச் சிவஞான மாதவன்செய் சிறந்த நூலாம்
காஞ்சிப்பு ராணத்திற் கவிகள்பல வற்றினுக்குக் கனிவு மிக்க
வாஞ்சிப்பாற் சைவநலம் வளங்கொழிக்கும் பொருள்விரித்தாய்
[மகிழ்ந்து கேட்டே
யாஞ்சுவைத்தே மதுரினைத்தே யாவரினி உரைப்பரென்றே அழுங்கு
[வேமால்

6. குளமென்னும் சொல்லினுக்கு நெற்றியெனப் பொருள்கூறிக் குணக்குன்
[றேயெம்
உளங்கொளற்கா 'அல்லமனா உருமாறிச் சிவபெருமான் ஒண்பொட்
[டொப்பக்
களங்கொண்ட கறையினையே குளஞ்சேர்த்தான்' என்னுமுரை
[காட்டி நன்கு
வளங்கெழும விரித்துரைத்தாய்! மகிழ்வுரைகள் தெளித்தநீ மறைந்தா
[யையோ!

N. R. சுந்தரராசன்.
கரந்தைப்புலவர் கல்லூரி மாணவர், சைதாப்பேட்டை.

பண்டிதரெனும் பெரும் பட்டம் தாங்கி
எண்டிசை யோங்கு மிரும்புகழ் பெற்ற
வேங்கடசாமியெம் வித்தகக்குரிசில்!
ஓங்கறு பதாண்டின் ஒள்ளிய விழாவைக்
களிப்புறயாங்கள் காணுமுன்னின்னே
ஒழித்தவன் அறனென ஓதவும்படுமோ!
கண்ணில்லாதவக் காலனந்தக
னெண்ணத்தகுமென விசைப்பர்நல்லறிஞர்
அந்தோ! அவன்செயல் அடுக்குமோ! ஐயகோ!
செந்தமிழ்ப்பயிர்க்குத் தென்றலாய் விளங்கினை
கவினுறு நின்முகங் காணுதப்பயிர்
புவிதனில் வாடிப்புலர்ந்தன கண்டாய்!
மாணவர் மனம்நனி மழுங்கின, நின்னைப்
பேணிய புலவோர்பெருந்துயர் உழந்தனர்
சங்கநின்விரிவுரை சாராதயர்ந்தது!
இங்கிதநின்மொழி யேலாதிதழ்கள்
வெள்ளேடாக விளங்கின இவ்வணம்
வள்ளல் நீ மறைதல் வரைதற்காமோ!

K. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் B. A; B. L; தஞ்சை.

நிகழ்ச்சி அறிவிப்பு

திருவாளர் நாவலர் பண்டி **ந. மு. வேங்கடசாமி நாட்டார்** அவர்கள் இறைவனடியடைந்தமை குறித்து, சுபானு ஆண்டு பங்குனித்திங்கள் 23ம்நாள் 5—4—1944 புதன்கிழமையன்று மாலை 7மணிக்குத்திரிசிரபுரச் சைவ சித்தாந்த சபையின் ஆதரவில் சபைக்கட்டிடத்தில் திருவாளர் **வி. கல்யாண சுந்தரம் பிள்ளை** ரிடயர்ட் ஆடிட்டர் கல்கத்தா அவர்கள் தலைமையில் ஓர் இரங்கற்கூட்டம் கூட்டப்பெற்றது. அதுபொழுது திருவாளர்கள் K. A. P, விசுவநாதம், N. ஹாலாசியம் ஐயர், வித்வான் ம. பெரியசாமிப் பிள்ளை முதலியோரால் **ந. மு. வேங்கடசாமி நாட்டார்** அவர்களின் அரியகுணங்களைப் பற்றியும், கல்வித்திறமையைப்பற்றியும், தமிழ்த்தொண்டுகளைப்பற்றியும், பாராட்டிப் பேசப்பெற்றபின் எல்லோரும் எழுந்து நிற்க ஒரு அனுதாபத் தீர்மானம் ஒரு முகமாகநிறைவேற்றப்பட்டது.

அமைச்சர் நன்றி கூறத் திருவாளர் நாட்டார் அவர்களின் "வாழ்க்கை வரலாறு" என்னும்புத்தகம் வந்திருந்தோர்களுக்குஇலவசமாகவழங்கப்பெற்று, சுமார் இரவு 9 மணிக்குக்கூட்டம் கலைந்தது.

கரந்தைத் தமிழ்ச்சங்கம், தஞ்சை.

சங்கச்சார்பில் 9—4—44ஆம் நாள் நாவலர் பண்டித, ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் மறைவுகுறித்து ஓர் இரங்கற்கூட்டம் இராவுசாகிபு, ஐ. குமாரசாமிபிள்ளை B. A., அவர்கள் தலைமையில் நிகழ்வுற்றது. சங்க அமைச்சர் M. வரதராசன் B. A., B. L., கரந்தைக் கவியரசு. R. வேங்கடாசலம்பிள்ளை, வித்துவான் அ. வடிவேலர், வித்துவான் வி. அ. அரங்கசாமி, வித்துவான் உ. பழநிமுதலியார், வித்துவான் மு. சடகோபஇராமாநுசம்பிள்ளை முதலியோர் நாட்டாரவர்கள் பிரிவுக்கிரங்கிச் சொற்பொழிவாற்றினார்கள்.

கரந்தைப்புலவர் கல்லூரி இளங்கோவடிகள் தமிழ்க்கழகத்தின் சார்பில் 30—3—44 மாலை நான்குமணிக்கு நாவலர் பண்டித, ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் மறைவுகுறித்து இராவுசாகிபு, ஐ, குமாரசாமிபிள்ளை B. A; அவர்கள் தலைமையில் இரங்கற்கூட்டம் நிகழ்வுற்றது. கல்லூரியாசிரியர்களும் மாணவர் சிவ. கந்தசாமியவர்களும் நாட்டார் பிரிவுக்கிரங்கிச் சொற்பொழிவாற்றினார்கள்.

நம் சங்கச்சார்பில் 1-5-44ஆம்நாள் தமிழிசைச்சங்கம் தொடங்கப்பெறும். அன்பர்கள் அனைவரு ந. வந்தருளவேண்டுகின்றோம்.

நம்சங்கத்திற்கு, சர். பி. டி. இராசன் அவர்கள் 30—4—44ல் வருதற்கு உடன்பட்டுள்ளார்கள். அவர்கட்குச்சங்கம் ஒருவாழ்த்துப்பா வழங்கிப்போற்றும் என்பதைஅன்பர்கட்கறிவிக்கின்றோம்.

18—4—44 மாலை 6மணிக்குச்சங்கச்சார்பில் அப்பர் திருநாள் கரந்தைக் கவியரசு R. வேங்கடாசலம் பிள்ளையவர்கள் சீரியதலைமையில் கொண்டாடப் பெற்றது. வித்துவான் உ. பழநி முதலியார் 'அப்பர்' எனும் பொருள்பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள்.

வேண்டுகின்றோம்.

கரந்தைப் புலவர்கல்லூரிக்குத் தமிழ் M. A., அல்லது B. A; (Hons) தகுதியுள்ள தலைவர்(Principal)ஒருவரும், உமாமகேசுவர நடுத்தரப்பள்ளிக்கு B.A., L.T; தகுதியுள்ள ஆசிரியர் ஒருவரும் வேண்டியுள்ளமையின், தகுதியுள்ளோர் சங்கத்தலைவருக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

கரந்தைப்புலவர் கல்லூரியிற்சேர்ந்து கல்விபயிலுதற்கு விரும்பி விண்ணப்பித்துக்கொள்ளும் மாணவர்கள் 1944 மே மாதம் 10ஆம் நாளிற்குள் கல்லூரி எழுத்தாளர் இராவுசாகிபு ஐ. குமாரசாமி பிள்ளை B. A; அவர்கட்கு விண்ணப்பம் அனுப்பிச்சேர்தற்குரிய விண்ணப்பத்தாளைப்பெற்று நிறைவு செய்து நற்சான்றுகளு (Conduct certificate) டன் அனுப்பிவைக்கவேண்டுகின்றோம்.

குறிப்பு:— விண்ணப்பத்தாள் வேண்டுவோர் ஒன்றரையணாத் தபாற்றலை அனுப்பவும்.

உ

பண்டித, நாவலர், நாட்டார் பிரிவு.

என் நண்பர் நடுக்காவேரி **பண்டித நாவலர் வேங்கடசாமி நாட்டார்** அவர்கள் தம் பருவுடல் நீத்துச் சிவபதம் எய்திய செய்தி தமிழன்பர்களுக்குப் பெரிதும் வருத்தம் தருவதொன்று. நம் நாட்டாரவர்கள் தம் இளமைப் பருவத்தில் மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பிரவேச, பால பண்டித, பண்டித வகுப்புக்களில் முறையே தேர்ச்சிபெற்று முதற்றரப் பரிசு பெற்றவர்கள். திருச்சி எஸ். பி. ஜி. கல்லூரியிலும், அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திலும் நெடுங்காலம் தமிழாசிரியராக இருந்து சிறந்த முறையில் பல மாணவர்கட்குத், தமிழறிவுறுத்திய நல்லாசிரியர் ஆவர். சிவபக்தியும், நல்லொழுக்கமும் அன்புடைமை முதலிய உயர் குணங்களும் நிரம்பப் பெற்றவர்கள். கபிலர் முதலிய உரைநடை நூல்களும், அகநானூற்று உரை முதலிய உரை நூல்களும் ஆக்கி அளித்த புலமை வள்ளலுமாவர். இவர்களுக்கு அணிமையில் அறுபதாண்டு நிறைவுக் கொண்டாட்டம் நடத்திக் காணத் தமிழ் நாடு மிக்க விருப்பத்தோடு எதிர்பார்த்து இருந்தது. அது நிறைவேருமை, இவர்கள் பிரிவுத் துன்பத்தை இன்னும் மிகுவிக்கின்றது. எழுத்து முறைபோலப் பேசும் திறனும் இவர்களிடம் வியக்கத்தக்க முறையில் அமைந்திருந்தது. திருநாவுக்கரசு நாயனுர் முதலிய சிவனடியார் பெருமைகளை எடுத்துக் கூறுங்காலும், அருட்பாசுரங்களாகிய தேவார முதலியவற்றை ஓதுங்காலும் இவர்கள் உள்ளம் அவற்றில் மிகவும் ஈடுபட்டு உருகுவதுண்டு. எக்காலத்திலும் இவர்கள் நெற்றியில் திருநீறும், சந்தனத்திலகமும் திகழ்ந்து சிவநேசத்தைப் புலப்படுத்தி விளங்குவதுண்டு. கல்வி, அறிவு, ஒழுக்கம் எல்லாவற்ருலும் குறைவற விளங்கிய தமிழன்னையின் தவப் புதல்வர் நாட்டாரவர்கள் பிரிவு தமிழ் நாட்டிற்கு ஒரு பெருங் குறையேயாகும். என் செயலாம்! நிலையாமை இருந்தவாறு இது! நாட்டார் நல்லுயிர் இறைவன் திருவருள் அமிழ்தில் தோய்ந்து இன்புறுக என வேண்டுதலே அன்றி வேறு யாம் செயக்கடவது என்?

மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார்.

நாவலர், பண்டித. திரு. வேங்கடசாமிநாட்டாரவர்கள் சிவபதமடைந்து விட்ட செய்தியை, யான் பவாநியிலிருக்குங்கால் கேள்வியுற்று ஆற்ருெணுத் துயரமெய்தினேன்.

நாட்டாரவர்கள் மறைவால் தமிழுலகமும் சைவஉலகமும் பொலிவு குன்றி நிற்கின்றன. இத்தலைமுறையில் மிகச் சிலரே அவர்கள்போல் ஆழ்ந்தகன்று தெளிந்த தமிழ்ப்புலமை யுடையவர்களாவர். அவருள் ஒருவரை இழத்தல் பெருந்துன்பந் தருவதேயாகும். அவர்கள் புலமைக்குத் தக்க சான்றுகளாக அவர்களியற்றிய நூல்கள் பல நின்று நிலவவும், அவற்றுள்ளும், அவர்கள் தம் வாழ்நாளின் இறுதிப் பகுதியில் எழுகியுதவிய சிலப்பதிகார உரையே அவர்கள் பெயரைத் தமிழ் வானில் பேரொளியுடன் விளக்குமொரு பெரிய உடுவெனப் பதித்துவிட்டதென்று பலரும் மதிப்பர். அவர் செய்த நன்றியைத் தமிழர் என்றும் மறவாது போற்றுங் கடப்பாடுடையர்.

 ச.சச்சிதானந்தம் பிள்ளை, B. A; L. T.

(8-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

கல்லூரி வேறு, தம் குடும்பம்வேறு எனக் கருதாமல் குடும்ப உறுப்பினுள் கரந்தைப் புலவர் கல்லூரியும் ஒன்றெனக் கருதினார்கள். இத்தகைய கல்லூரித் தலைவரை எம் கரந்தைப் புலவர் கல்லூரி இனி எங்ஙனம் பெறப்போகின்றது? நாவலரவர்கள் அருமைபெருமைகளை மேற்கூறிய தமிழவேள் உரைகளாலும், தமிழ்நாட்டில் உலவும் நாட்டாள், கிழமைத்தாள் முதலியவைகளாலும், நாவலர் அவர்கள் செயல்களாலும் பொழிலன்பர்கள் நன்குணர்ந்துள்ளார்களாகையால் யாம் மேலும் விரித்துணர்த்த வேண்டியதில்லையென எண்ணுகின்றோம்.

அன்பர்கள் நாவலரவர்களின் கல்லறையில் யாம் ஆற்றிய சொற்பொழிவினை ஊன்றிப் படித்தருள வேண்டுகின்றோம். நாவலரவர்கள் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புக்கள் தனியே நூல்வடிவாகஅச்சிட்டு மண்டிலக்கரண நாளில் வழங்குதற்குச் சமைந்துள்ளமையின் அவர துவாழ்க்கைவரலாற்றுக்குறிப்பினைத் தமிழ்ப்பொழிலில் தனியே வரையாதுவிடுத்தேம். பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியாரவர்கட்கு அரசாங்கத்தாரால் மகாமகோபாத்தியாய பட்டம் அளிக்கப்பெற்றமை குறித்துப் பண்டிதமணியவர்களைப் பாராட்டுவான் வேண்டிச் சங்கப்பெருமன்றத்தே நிகழ்ந்தபாராட்டுக்கூட்டத்தில் நாவலரவர்கள் பண்டிதமணியைப் பாராட்டிப்பேசும்பொழுது, "நம் பண்டிதமணியவர்கள் சிறந்த நூலாசிரியர், உரையாசிரியர், போதகாசிரியர், மேலுங்கூறின் ஞானாசிரியருமாவார்கள்; இத்தகையதகுதிப்பாடுகளெல்லாம் ஒருங்கமைந்த இவர்கட்கு, இப்பட்டத்தால் வரக்கூடிய சிறப்பு என்னுளது? சிலருக்குச் சிலபட்டங்கள் வந்துறுதலான் அப்பட்டங்களால் அவர்கள் சிறப்புப்பெறுதலையும், சிலபட்டங்கள் தகுதியின்மிக்கார்பால் சென்றுறுதலால் தாம்சிறப்புறுதலையும் யாம் காணுகின்றோம். அதுபோன்றே மகாமகோபாத்தியாய எனும்பட்டம் நம்பண்டிதமணியவர்கள் பால் வந்தடைந்து தான் சிறப்புப்பெற்றது எனக் கூறுவேன்." என மொழிந்தார்கள். பண்டிதமணியவர்கள் பாராட்டுரைகட்கு மறுமொழி கூறுங்கால், "நாட்டாரவர்கள் தன்பாலுள்ள தன்மைகளையெல்லாம் அன்புகாரணமாக என்மேல் ஏற்றிமொழிந்தார்கள். பண்டைப் புலவர்களைப்போன்ற செந்நாப்புலவராய அவர்கள் மொழி நலன்பயக்குமாகையால் அவ்வுரைகளை அன்புடன் ஏற்றுக்கொள்ளுகின்றேன்." என மொழிந்தார்கள். நம் பண்டிதமணியவர்கள்பால் உள்ள தன்மைகளை நாட்டாரவர்கள் அறிந்து மொழிந்தமையும், நாட்டாரவர்கள்பால் இவ்வியல்புகள் இயைந்துள்ளன என நம் மகாமகோபாத்யாய பண்டிதமணியவர்கள் அறிந்து மொழிந்தமையும், வாய்மையாகக் கொள்வதன்றிவேறுகொள்ளற்காமோ? சுருங்கக் கூறின் நாவலரியல்பை நம் நாவலரே வாய்விட்டுரைத்தார்

எனலாம். இச்சுருக்கவுரைகளிலேயே நாவலரியல்புகள் அடங்கியுள்ளன எனஎண்ணுகின்றோம். நாவலரவர்களிடம் மாணவராகக்கல்விபயின்று, அவர்கள் தலைமையின்கீழ்ப் பல்லாண்டுகள் ஆசிரியராகப்பணிபுரிந்து, அவர்களுடன் நாளும் நெருங்கிப்பழகி உரையாடி மகிழ்ந்திருந்தேம். இங்ஙனம் மகிழ்ந்திருந்த எமக்குத் துடுமென இன்று அவர்களின் மறைவு குறித்து எழுதுதற்குரிய தீவினை நேரிட்டு, அத்தீவினை காரணமாக யாம் எழுதுதற்குக் கையில் இறகேந்தினேமாயினும், எம்மையறியாமற் கண்களில் நீர் தாரைதாரையாகப் பெருகுகின்றமையின்மேலும்எழுதுதற்கு ஆற்றல் அற்றேம். இவர்களுக்கு அண்மையில் நிகழஇருந்த அறுபதாம் ஆண்டு நிறைவுவிழாவைக்குறித்து இத்திங்கள் தமிழ்ப்பொழிலில் தமிழ்மக்கள் தமிழ்நாட்டில்இவ்விழாவினைச் சிறப்புறக்கொண்டாட வேண்டுமெனவேண்டி ஒருசிறப்புரை வரையஎண்ணியிருந்தேம். அறுபதாம் ஆண்டுவிழாப் புகழ்ப் பாக்களை வகைப்படுத்திப் பொழிலில் வெளியிட எண்ணியிருந்த யாம், இன்று இவர்கள் மறைவு குறித்த இரங்கற்பாக்களைப் பொழிலில் வெளியிடும் தீவினைக்குள்ளானேம்.

நாவலரவர்களை இழந்துவருந்தும் நாவலரின் மனைவி மக்களுக்கும், உடன்பிறப்பாளர்கட்கும் எமது ஆழ்ந்ததுயரினை அறிவித்துக் கொள்ளுகின்றேம். வாழ்நாள் முழுமையும் இன்றமிழ் மொழிக்கே பணிபுரிந்து மொழியைச் சிறப்பித்த எம் தலைவர் நாவலரவர்களின் இன்னுயிர் இறைவன் திருவடி நீழலில் இன்புற்றிருக்க இறைவனைவழுத்தி வணங்குகின்றேம்.

மற்றோரிழப்பெமை வருத்தாநின்றது.

தமிழ்நாட்டில் தமிழ்மொழி வளர்ச்சிக்கெனத் தோன்றிய திருமடங்கள் தம் கடமையை மறந்திருந்த காலத்தில் திருப்பனந்தாள் திரு. காசிமடாலயத் தலைமை தாங்கித் தமிழர்கள் போற்றும் பற்பல பரிசுகளை நிறுவி வழங்கிய அருட்டிரு **காசிவாசி சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகள்** அவர்கள் 26—3—44-ஆம் நாளில் இறைவன் திருவடி நீழல் அடைந்தமை கேட்டு மிகமிக வருந்துகின்றோம். இவர்கள் பிரிவு நம்மை மிகுதியும் வருத்தாநின்றது. இவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்துத் தமிழ் வித்துவான் தேர்வில் முதல்வராகத் தேர்ச்சியுறுவோர்க்கு ஆண்டுதோறும் அளித்தற்கு ஆயிரம் (1000) வெண் பொற்காசுகளைப் பரிசாக அமைத்தபின், இப்பரிசிலைப் பெறுவான் வேண்டிப் பலமாணவர்கள் தமிழ் நூல்களை மிகுதியும் வருந்திக் கற்றனர். தாம் நிறுவிய பரிசின்மூலம் தமிழை வளர்த்த இப் பெரியார் இப்பரிசு ஒன்றோடு நில்லாது, இராசராச அபயகுல சேகரசோழன் நினைவுப்பரிசு, சேக்கிழார்பரிசு, நம்பியாண்டார்

நம்பிகள் பரிசு, மெய்கண்டார் அருணந்தி சிவாச்சாரியார் பரிசு, மாணிக்கவாசகர் பரிசு முதலிய பற்பல பரிசுகளை ஏற்படுத்தி மேற்கூறிய பரிசிற்கும், இப்பரிசுகட்கும் வைப்பு நிதியும் நிறுவிப் புகழ்கொண்டுள்ளார்கள். இவர்கள் அருட் செயலை ஏனையமடங்களின் தலைவர்களும்பின்பற்றுவார்களானால் தமிழ் மொழி மிகவிரைவில் செழிப்புற்றோங்கும் என்பதில் ஐயமுண்டோ? கொடைத்திறனும், தமிழ் மொழிமாட்டுத் தணியாக்காதலும் எளியவாழ்வுமுடைய இச்சுவாமிகள் இவ் விந்திய நாட்டில் எப்பல்கலைக்கழகத்திலும் எம்மொழிக்கும் அளிக்கப்பெறாதபரிசுகளைத் தமிழ்மொழிக்குச்சென்னை, அண்ணா மலைப் பல்கலைக்கழகங்களின் வழியே அளித்துத் தனிப்பெரும் புகழ்கொண்டுவிளங்கினார்கள். இவர்கள்மறைவால் தமிழ்த்தாய் தான் மேலும்அடையவேண்டிய சிறப்புக்களை இழந்துவிட்டாள். மொழிக்கென நிலைத்தகொடையை இந்நாட்டில் முதன்முதல் ஏற்படுத்தி இந்நாட்டுச் செல்வர்கட்கும், ஏனைய மடங்களின் தலைவர்கட்கும் அறிவுகொளுத்திய அடிகளின் ஆருயிர்இறைவன் திருவடி நீழலில் இன்புற்றிருக்க இறைவனைவழுத்தி வணங்கு கின்றோம்.

குறிப்பு:— கரந்தைத்தமிழ்ச்சங்கத்தோடு இணைப்புற்றுச் சிறந்த தமிழ்ப்பணி புரிந்துவரும் கண்டாச்சிபுரம் தமிழ்ச்சங்கத்தாரும், வேகுப்பட்டித் தமிழரசு மன்றத்தலைவர் ஆ. பழ. குமரப்பச்செட்டியாரவர்களும், அம்மன்ற அமைச்சர் லெ. மாணிக்கம் அவர்களும், போளூர்தாலூகா கலசப்பாக்கம் ஆசிரியர் சங்கத் தாரும், திருவத்திபுரம் பானுகவி மாணவர் கழக அமைச்சர் வித்துவான், கோ. வில்வபதியவர்களும், கோவிற்பட்டி போர்டு உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் கழகத்தாரும்,நன்னிலம்போர்டுஉயர்நிலைப்பள்ளி திருக்குறள்வகுப்பு அமைச்சர் வே. வைத்திலிங்கம் அவர்களும், போளூர் போர்டு உயர்நிலைப்பள்ளி ஆசிரிய மாணவ கழகச்சார்பில் அப்பள்ளித்தலைமையாசிரியர் அ. பாலசுந்தரமுதலியார் அவர்களும், குளித்தலை,கம்பர் செந்தமிழ்ச்சங்கத்தாரும், திருவாரூர்தம்பிரான் தோழர் தமிழ்ச்சங்கத்தாரும், சென்னை கோ. முத்துப்பிள்ளையவர்களும், மேலைச்சிவபுரி கணேசா ஓரியண்டல் கல்லூரி முதல்வர் ஆ. வ. இராமனுதச் செட்டியார் B. A. (Hons) அவர்களும், காரைக்குடி இந்துமதாபிமானச் சங்கத் தாரும், மயிலாப்பூர் வழக்குரைஞர், கா. இராமனுதன் செட்டியாரவர்களும், மேலைச்சிவபுரி மாணவர் நன்னெறிக்கழகத்தாரும், நாட்டாரவர்கள் மறைவு குறித்துவருந்தி இரங்கலுரைகளும், இரங்கற்பாக்களும், இரங்கல் முடிபுகளும், அனுப்பியுள்ளனர். இவ்வன்பர்கட்கும், மேற்கூறப்பெற்ற சங்க கழகங்கட்கும் எம் உளமார்ந்த நன்றியறிவைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேம்.

பொழிலாசிரியர்.